# சந்திரனில் வைத்த கருவிகள் சரியாக இயங்குகின்றன

Reg'stered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 358
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் தை 26 ஜுஹஜ் 11 திங்கட்கிழமை 8 2 71)

ஹுஸ்டன், பெப். 7 அப்பலோ-14 வீரர்கள் அம்புலியில் விட்டு வந்த கருவிகள் யாவும் சரியாக வேலைசெய்கின்றன என்று தரைக் கட்டுப்பாட்டு நிலையத்தினர் அறிவித்துள்ளனர் சந்திர தரையின் அடியில் நிகழும் நிகழ்ச்சிகளை இந்தக் கருவிகள் பதிவு செய்து நமது பூமிக்கு அனுப்ப வல்லவை.

இதேசமயம் சந்திரனில் தமது அலுவல்களை முடித்துக்கொண்டு வீரர்கள் மூவரும் பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள் தாய்க்கலத்தின் பிரதான எஞ்சினை வெடிக்கச் செய்து சந்திர ஈர்ப்பு விசையிலிருந்து விடுபட்டு அவர்கள் பூமியின் திசையில் கிளம்பினர்கள்.

இலங்கை நேரப்படி பத்தாந் திகதி காலை 2-33 மணிக்கு பசுபிச்சமுத்திரத்தில் வந்திறங்குவார்கள்.

## தைப்பூசம்

யாழ்ப்பாணம், திங்கள்

இ. போ, ச. இந்து ஊழியர் சங்கத்தினுல் நிர்மாணிக்கப்பெற்ற திருக்கோணேச்சரம், பாலாவிப் பிள்ளையார் கோவில் நாளை தைப்பூசவிழா நடைபெறவிருக்கிறது.

# 9 அம்ச அடிப்படையில் தமிழ்க் கட்சிகள் ஒற்றுமை

## அரசியல் அமைப்புத் திருத்தம்; மறுத்தால் வேறு மார்க்கம்

### வல்வை மகாநாட்டில் தீர்மானம்

[நமது நிருபர் வ. பழனிப்பிள்ளை]

தமிழரசுக்கட்சி, தமிழ்க் காங்கிரஸ் தமிழர் சுயாட்சிக் கழகம், ஈழத் தமிழர் முன்னணி ஆகிய நான்கு தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் நேற்று நடைபெற்ற ஒற்றுமை மகாநாட்டில், அரசியல் அமைப்பு சம்பந்தமான அடிப்படைத் தீர்மானங்களுக்கு 9 அம்சத் திருத்தம் கொண்டுவருவதற்கு ஒருமனதாக ஒப்புக்கொண்டனர். இந்த 9 அம்சத் திருத்தங்களையும் அரசியலமைப்பு வழிகாட்டு விஷயாலோசனைக் குழுவோ, அரசியல் நிர்ணய சபையோ நிராகரித்தால் அதன் பின்பு என்ன நடவடிக்கை எடுப்பதென்பது பற்றித் தீர்மானிக்கும் பொறுப்பு இதற்கெனத் தெரிவுசெய்யப்பட்டுள்ள ஒரு குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை வாசிகளான அருள் சபாரத்தினம்பிள்ளை, திரு. எஸ். ஞானமூர்த்தி, திரு ஏ வி வேற்பிள்ளை ஆகியோரின் முயற்சியினுல் கூட்டப்பெற்ற இந்த ஒற்றுமை மகாநாடு நேற்று மாலை ஐந்து மணிக்கு ஆரம்பமாகி இரவு ஒன்பது மணியளவில் முடிவடைந்தது. கூட்ட முடிவில் நான்கு கட்சித் தலைவர்களும் கைச்சாத்திட்ட கூட்டறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டது.

## சாதி மதத்தில் இந்திய அரசியல்

சாதி, மதம், பிரஜா உரிமை சம்பந்தமான கோரிக்கைகளும் இந்த மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டன. இந்திய அரசியல் அமைப்பிலுள்ள சாதி, மதம், பிரஜா உரிமை சம்பந்தமான அம்சங்களைப் புதிய அரசியல் அமைப்பில் சேர்க்க வலியுறுத்தவேண்டுமெனமுடிவுசெய்யப்பட்டதாகத்தெரிகிறது.

தமிழ்க் கட்சித் தலைவர்களுக்கிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அரசியல் அமைப்பின் அடிப்படைத் தீர்மானங்களுக்குத் திருத்தமாகக் கொண்டுவரப்படுவதற்குத் தீர்மானிக் கப்பட்ட 9 அம்சங்களின் விபரம் வருமாறு:-

1. இலங்கையில் எந்தப் பாகத்திலும் வாழும்சிங்கள மக்களும் தமிழ் பேசும் மக்களும் தங்களுடையசொந்த மொழியில் அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு செயலாற்றுவதற்கான உரிமை இருக்கவேண்டும்,

2. இந்நாட்டில் வாழும் ஒவ்வொரு குழந்தையும் தன் தாய் மொழி மூலம் கல்விகற்கும் உரிமை இருக்க வேண்டும் இதற்கானவசதிகளை அரசு செய்துகொடுக்க வேண்டும்.

3. ஒவ்வொரு பிள்ளையும் தனது உயர்தரக்கல்வியையும் அரசாங்க சேவையில் சேர் வதற்கானபரீட்சையையும் தனது தாய் மொழியில் கற்று பரீட்சை எடுத்து சேவையில் சேரும் உரிமை இருக்க வேண்டும்.

4. சிங்களமும் தமிழும் இந்நாட்டின உத்தியோக மொழிகளாக இருக்கவேண்டும். அவற்றின் உபயோகம் பற்றி அரசியல் அமைப்பில் திட்டவட்டமான விபரங்கள் இருக்கவேண்டும்.

5 நீதிநிர்வாக மொழி சிங்களமும் தமிழுமாக வேண்டும். பதிவேடுகளும் அந்தமொழிகளிலேயே இருக்கவேண்டும் இதற்கான உறுதி அரசியல் அமைப்பில் செய்யப்பட வேண்டும்.

6. அடிப்படை உரிமைகளுக்குமுரணனசட்டங்களை ஒட்டியோநிர்வாக ஒழுங்கினங்களைப் பற்றியோ நீதி மன்றத்தில்நடவடிக்கை எடுக்கும் உரிமைஅரசியல் சாஸனத்தில் அமையவேண்டும். நீதிநிர்வாகத்தில் எவ்வித அரசியல் தலையீடும் இருத்தலாகாது.

7. இந்நாட்டு மக்களிடையே நிலவும் சாதிபற்றியும் சமயம் பற்றியும் இந்திய அரசியல் அமைப்புத்திட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிகள் இங்கும் ஏற்கப்படவேண்டும்,

8 இலங்கைக் குடியரசு சமயச் சார்பற்ற அரசாக இருத்தல் வேண்டும். ஆனல் பௌத்த, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களைப் பாதுகாத்துப் பேணவேண்டும்.

9. (அ) இலங்கையில் பிறந்த ஒவ்வொருவரும் அவரது தந்தை அல்லது தாய் இலங்கையில் பிறந்தவராய் இருப்பின்.

(ஆ) இலங்கைக்கு வெளியில் பிறந்தவராயின் வரது பெற்ருேர் இலங்கைக் குடியுரிமைக்குத்தகுதியுடையவராயின்.

(இ) 15—11—1948 க்கு முன் இருந்து தொடர்பாக இலங்கையில் வசிப்பவராயும் இலங்கைப் பிரஜையாக இருப்பதற்கு விரும்புபவராயும் இருப்பின் அவர்களெல்லோரையும்இலங்கை பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளும் தீர்மானம் அரசியல அமைப்பில்சேர்க்கப்படவேண்டும் வம்சாவழிப் பிரஜைக்கும் பதிவுப் பிரஜைக்கும் எவ்விதப பாகுபாடும். இருத்தலாகாது எக்காரணம் கொண்டும் எவருடைய பிரசாவுரிமையும் பறிக்கப்படலாகாது.

தமிழ்க்கட்சித்தலைவர்களை ஒற்றுமைப்படுத்தும் முதலாவது கூட்டம் வல்வெட்டித்துறையிலுள்ள வர்த்தகர் திரு. எஸ். தங்கவடிவேலின் இல்லத்தில் நேற்றுப் பிற்பகல் ஐந்து மணிக்கு திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்தின் தமிழ்த்தாய் வணக்க[illegible]பமானது.

கூட்ட அமைப்பாளர்களில் ஒருவரான திரு. எஸ் ஞானமூர்த்தி குத்துவிளக்கேற்றினர் திரு அருள் சபாரத்தினம்பிள்ளை ஆரப்ப உரைநிகழ்த்தினர் யாழ் நகர முன்னுள் மேயர் திரு.சி நாகராஜா தலைமையில்கூட்டம்நடை பெற்றது. கூட்டமுடிவில் ஏ வி வேற்பிள்ளை நன்றிகூறினர்.

## காங்கிரஸ் எம். பி.க்கள் ஆதரவு

வல்வெட்டித்துறையில் நடைபெற்ற தமிழ்க் கட்சிகளின் தலைவர்களின் ஒற்றுமைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட அரசியல் அமைப்புத் திட்ட அடிப்படைத் தீர்மானங்களுக்கான திருத்தப் பிரேரணைகளைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சி எம்.பி.களும் ஆதரிப்பார்கள்

தமிழ்க் காங்கிரஸ் கட்சி வெளியிட்ட ஓர் அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்க் காங்கிரஸ் கட்சியும், எம்.பி.க்களும் மேற்படி திருத்தங்களை அரசியல் நிர்ணய சபையிலும், வழிகாட்டுக் குழுவிலும் ஆதரிப்பார்கள் என்றும் ஏற்கனவே மற்றவர்களால் விடுக்கப்பட்ட அறிக்கைகள், கட்சியின் அங்கீகாரம் பெறப்படாதவையென்றும் தெரிவிக்கப்பட்டது.

## ஏன் கலந்துகொள்ளவில்லை எம். சி. கூறும் விளக்கம்

யாழ்ப்பாணம், திங்கள்

சோஷலிஸப் பாதையில் அடிஎடுத்து வைத்து முன்னேறிச் செல்லும் செயலில் நாடு ஈடுபட்டிருக்கும் இச்சமயத்தில் தமிழர் சிங்களவர் என்று பிரித்து பிளவுபடுத்தி தேசியஐக்கியத்தை சீர்குலைக்க முனையும் எந்தச் சக்திகளுடனும் தொடர்பு கொள்வதைத் தாம் விரும்பவில்லை யென்று நியமன எம்.பி. யும் அகிலஇலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகா சபைத் தலைவருமான திரு. எம். ஸி. சுப்பிரமணியம் நேற்று விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

வல்வெட்டி துறையில் நேற்று நடந்த தமிழ் கட்சிகள் ஒற்றுமை மகாநாட்டில் தாம் ஏன் கலந்துகொள்ளவில்லையென்பது பற்றி அந்த நீண்ட அறிக்கையில் விளக்கம் கொடுத்திருக்கிருர் அறிக்கையின்சுருக்கம் வருமாறு:-

தமிழர் — சிங்களவர் ஒற்றுமையின் அஸ்திவாரத்திலேயே சேஷாலிஸக்கட்டடத்தைக்கட்டியெழுப்பமுடியும். அதைவிட்டு அந்த அஸ்திவாரத்தையே தகர்ப்பதற்குப் பிரிந்து கூடுவது பிற்போக்கான நோக்கமாகும்.

பஞ்சமர்களை ஆலயத்துட் சென்று ஆண்டவனைவழிபட அனுமதியேன் என்று அடியோடு மறுத்த ஸி. சுந்தரலிங்கத்தோடு கலந்து கொண்டு போலி ஒற்றுமை பேசும் கூட்டத்தில் யானும் கலந்து கொண்டால் அது வேடிக்கைத்தாகவே இருக்கும்.

(8-ம் பக்கம் பார்க்க)

## கைத்தொழில் ஆலோசனை சபைகள்

கோட்டை, ஞாயிறு

கைத்தொழில் விஞ்ஞான விவகார அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்ன உள்ளூரில் கைத்தொழில்களை நிறுவுதல் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க 7 கைத்தொழில் ஆலோசனைச் சபைகளை நியமித்துள்ளார்.

8 FEB 1971 LIBRARY

## ஊரெழு ப. ச. தீர்மானம்

நல்லூர், ஞாயிறு
உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலையை இந்துக் கல்லூரியுடன் இணைப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து உடன் நடவடிக்கை எடுக்கும்படி வடபகுதி வித்தியாதிபதியை கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்றை உரும்பராய்-ஊரெழு பட்டினசபை நிறைவேற்றியுள்ளது.

இத்தீர்மானத்தின் பிரதி கல்வி அமைச்சருக்கும் கோப்பாய் எம். பி.க்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இன்று மட்டும்
**வெலிங்டன் சினிமா**
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
எம்.ஜி. ஆர். - சாவித்திரி
நடித்த
**வேட்டைக்காரன்**

## இவர்களையும் தெரிவுசெய்க!

வேலணை, ஞாயிறு
1964-ம் ஆண்டில் இலங்கையில் பட்டம்பெற்றவர்களுக்கும் 1965க்குமுன் இந்தியாவில் பட்டம் பெற்றவர்களுக்கும்புதிய பட்டதாரிகள் பயிற்சித்திட்டத்தில் இடம் கொடுக்குமாறு தீவுப்பகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் பிரதம மந்திரிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் கேட்டுள்ளார்.

......

கோட்டை, ஞாயிறு
நெற்செய்கை நடைபெறும் பிரதான இடங்களில் உள்ள கூட்டுறவு சங்கங்கள் உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் 320 லட்சம் புசல் நெல்லைக் கொள்வனவு செய்யவிருக்கிறது என கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. ஒல்கொட் குணசேகர தெரிவித்துள்ளார்.

**ராணி சினிமா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேஷன் - ஜெயலலிதா
நடித்த
**எங்கிருந்தோ வந்தாள்**

**வின்ஸர்** - யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஏ.வி.எம். ராஜன் - வாணிஸ்ரீ
சிவகுமார் - குமாரிலட்சுமி - சோ
நடித்த
ஏ. வி. எம். புரொடக்ஷனஸ்
**அன்னையும் பிதாவும்**

5-வது வாரம்
**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயாநாட்கள் 4 காட்சிகள்
கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (கொழும்பு)



சிவாஜி
காஞ்சனா
எம். என். நம்பியார்
நாகேஷ்
முத்துராமன்
இன்னும் பலர் நடித்த



**சி வ ந் த ம ண்**

தியேட்டருக்கு
ஒரு மனேஜர்
**தேவை**

தகுதி. ஆங்கிலம் தெரிந்தவராகவும், கணக்குப் பகுதியில் அனுபவமுள்ளவரும், தியேட்டர் அனுபவமுள்ளவரும், சினிமா யந்திர அனுபவமுள்ளவரும் வயது 35 தொடக்கம் 45 வயதுக்குள் இருக்கவேண்டும் பிணைப்பணம் ரூபா 2000/-.

சம்பளம்: நேரடியாகக் கதைத்துத் தீர்மானிக்கப்படும். விண்ணப்பிக்கும் முடிவு திகதி 10-2-71

ந. பாஸ்கரன்,
நிர்வாக அதிபர்,
லக்ஷ்மி தியேட்டர்,
நெல்லியடி,
2766 கரவெட்டி.

## விளையாட்டுப் போட்டி

புதுக்குடியிருப்பு, ஞாயிறு
புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டி 14-ம் 15-ம் திகதிகளில் அதிபர் க. வேலுப்பிள்ளையின் தலைமையின்கீழ் நடைபெறவிருக்கிறது.

**ஸ்ரீகாலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
ஜெய்சங்கர் — பாரதி
நடித்த
**காதல் பறவை**

REGAL Jaffna
Daily 3 shows
Poya days 10-30 a. m.
THE MAN, THE WOMAN AND THE MONEY

RAJAH Jaffna
Daily 4 Shows
Giuliano Gemma
in
BLOW HOT, BLOW COLD
( Color - Adults )

MANOHARA
Jaffna
Daily 4 Shows
Thomas Hunter
Henry Silva
in
The best Western
of the Year




## சுங்க ஏலவிற்பனை

28-5-1954-ம் திகதியிடப்பட்ட இலக்க 10675 அரசாங்க வர்த்தமானியில் (பகுதி 1 தொகுதி 2) பிரசுரப்பட்ட சுங்க ஏல நிபந்தனைக்கமைய கீழ்க் காணும் பொருட்கள் 1971-ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 15-ம் திகதி காலை 9-30 மணிக்கு இவ்வலுவலகத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஒப்பம்
எஸ். எம். ஜே. சேனரத்ன,
யாழ் மாவட்ட சுங்க சேகரிப்பாளருக்காக.

சுங்க அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
28-1-71.

5 வலைகள்.
2 ரூத்தல் சாம்பிராணி.
1 பெட்டி கற்பூரம்.
14 மூடை சாதிக்காய்.
3 மூடை சாதிப்பூ.
3 மூடை சாதிப்பூ.
39 மூடை கடுகு.
3 மூடை சாதிப்பூ.
3 மூடை சாதிக்காய்.
1 மூடை நைலோன் நூல்.
1 மூடை கராம்பு.
7 மூடை நைலோன் நூலும் வலைகளும்.
16 டின் வின்செஸ்ரர் மின்குள் (டோச்லைற்).
82 போத்தல் செவின் சீஸ் மீன் எண்ணெய் குளிசைகள்.
6 மின்சார கார் கோன்.
1 பெட்டி பேபி பவுடர்.
2767

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

திங்கள் 8—2—71

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அல்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கத்தோலிக்க நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 இசை வேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 சும்பு இசை.

344 மீ. அல்ட் 61 மீ.

மாலை 4-30 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்தநாள் வாழ்த்துக்கள், 5-30 மாணவர் மன்றம்.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 நாட்டுப்பாடல்கள், 6 45 வீட்டு டாக்டர், 7-00 வாத்தியஇசை, 7-15 வயலின், 7-45 நிலையஒலிப்பதிவுகள், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர் விருப்பம், 10-30 செய்தித் தொகுப்பு.

......

## சிரமதான மூலம் மிளகாய்ச்செய்கை

கம்புறுப்பிட்டியா, ஞாயிறு
23-வது சுதந்திர தினத்தைக் கொண்டாடுமுகமாக தெனியாய தொகுதியில் 275,000 மிளகாய்க் கன்றுகள் சிரமதான இயக்கத்தினரால் நடப்பட்டது.

பெருந்தொகையான தோட்டத் தொழிலாளர்கள் இவ்வியக்கத்தில் பங்கு பற்றினர். கொத்தப்பொல்ல இகலகம, மலம்மா, பல்லேகம ஆகிய ஊர்களில் 15 வீடிழந்த குடும்பங்களுக்கு சிரமதான முறையில் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டன.

இப்பகுதியிலுள்ள பலதெருக்கள் இத்தினத்தில் திருத்தியமைக்கப்பட்டன.

## வரிவிளம்பரம்

### தேவை

யாழ்ப்பாணம் — பெருமாள் கோயிலுக்கு இரவு 12 மணி தொடக்கம் காலை 6 மணி வரை காவல் ஆள் தேவை. விண்ணப்பிக்கவும். மனேஜர், பெருமாள் கோயில். 2803

காஷியர்:
காலை 7 மணி தொடக்கம் பகல் 12-30 மணி வரை ஒருவரும், பிற்பகல் 12-30 மணி தொடக்கம் மாலை 7 மணி வரை ஒருவரும் இரு காஷியர்கள் தேவை. பிணைப்பணம் ஒவ்வொருவருக்கும் ரூபா (500/-) சண்லைற் றைக்கிளினேர்ஸ், ராணி தியேட்டர் அருகாமை, யாழ்ப்பாணம். 2811

வீடு:
சகல வசதிகளும், நல்ல சுற்றுடலும், கார் போக்குவரத்துச் செய்யக்கூடியதுமான மின்சார வசதியும் கொண்ட வீடு ஒன்று இணுவில் கந்தசுவாமி கோவில் சந்திக்கும் மல்லாகம் சந்திக்கும் இடையில் வாடகைக்குத் தேவை. செ. தர்மலிங்கம், லிங்கம் அன்ட் கொம்பனி, 21/4, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 2814

### விற்பனைக்கு

கார்:
நல்ல நிலையிலுள்ள சி. என். ஏ. 40 கார் விற்பனைக்குண்டு. 71, இரண்டாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (பழைய தபாற்கந்தோர் சந்தி 2807

ரேடியோ:
ஜேர்மன் டெலிபங்கன் (TELEFUNKEN) (PORTABLE) ரேடியோ விற்பனைக்குண்டு. எஸ். பி. கிருஷ்ணன், கைசென்னி பகுதி, கச்சேரி, யாழ்ப்பாணம். 2806

### நன்றிநவிலல்

7-1-71ல் காலஞ்சென்ற எனது தாயார் (இணுவில் தெற்கு) கந்தையா பெண் ஆச்சிக்குட்டியம்மாவின் இறுதியாத்திரையிலும் 5-2-71ல் நிகழ்ந்த வீட்டுக் கிருத்திய வைபவத்திலும் கலந்து துயரைப் பகிர்ந்து கொண்ட உற்றார் உறவினர் நண்பர்கள் ஆதரவாக உதவி புரிந்த அன்பர்கள் மற்றும்முள்ளோர் அனைவர்க்கும் எனது அன்பு கலந்த நன்றி. க. கதிரவேல் ஆசிரியர், இணுவில். 2813

## சமாதான நீதவான்



யாழ்ப்பாணம், திங்கள்
யாழ்ப்பாணம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் கிளையின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான திரு. சபாபதிப்பிள்ளை கந்தசாமி சமாதான நீதிபதியாக நீதியமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

# விமானக் கடத்தல்காரரை திருப்பிக்கொடுக்க பாக். மறுப்பு

## ஆனால் இந்தியா மீது விமானம் பறக்க அனுமதி கோருகிறது

புதுடில்லி, பெப்ரவரி 7

**விமானக்கடத்தல்காரர் இருவரையும் திருப்பிக்கொடுக்க பாகிஸ்தான் அரசு மறுத்துவிட்டது.**

**லாகூரில் அழிக்கப்பட்ட விமானத்துக்கான நஷ்டஈடு அளிக்கப்படும் வரை பாகிஸ்தான் விமானங்கள் இந்தியா மீது பறப்பதற்கு மீண்டும் அனுமதிப்பது பற்றி ஆலோசனை செய்யமுடியாதென பாக்கிஸ்தான் அரசாங்கத்துக்கு இந்திய அரசு தெரிவித்துள்ளது.**

கடந்த வாரம் இந்திய விமானத்தைக் கடத்திய முகமத் ஹசீஸ் முகமத் அசரஸ் ஆகிய இருவரும் கிறிமினல் குற்றம் செய்திருப்பதால் அவர்களை இந்தியாவில் விசாரிப்பதற்கு திருப்பித்தருமாறு இந்திய அரசு கேட்டிருந்தது. இவ்விருவரையும் திருப்பித்தர முடியாதென பாகிஸ்தான் தெரிவித்ததாக இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தியா மீது பாகிஸ்தான் விமானங்கள் பறப்பதற்கு அனுமதிக்குமாறு பாகிஸ்தான் ஜனாதிபதி யஹ்யாகான் இந்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். இந்த வேண்டுகோள் அடங்கிய குறிப்பொன்றை இஸ்லாமபாத்திலுள்ள இந்திய ஹைகமிஷனரிடம் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சகம் கொடுத்தது. கடத்தப்பட்ட விமான இழப்புக்கான நஷ்டஈடு பற்றி இவ்வறிக்கையில் எவ்வித குறிப்புமில்லையென தூதரக அதிகாரிகள் தெரிவித்தனர்.

யஹ்யாகானின் வேண்டுகோளுக்கு இந்தியா பதில் அனுப்பியுள்ளது. லாகூரில் அழிக்கப்பட்ட இந்திய விமானத்திற்கான நஷ்டஈட்டை பாகிஸ்தான் அளிக்காதவரை பாகிஸ்தான் விமானங்கள் இந்தியாமீது பறப்பதற்கு மீண்டும் அனுமதிப்பது பற்றி யோசிக்க முடியாதென அக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### முஸ்லீம்கள் ஆர்ப்பாட்டம்

இன்றும் பாகிஸ்தானுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தை மாணவர்கள் நடத்தினர். ஆயிரக்கணக்கான இந்திய முஸ்லிம்கள் பாகிஸ்தானின் நடத்தைக்குக் கண்டனம் தெரிவித்ததோடு, விமான அழிவிற்கு பாகிஸ்தான் நஷ்டஈடு வழங்கவேண்டும் எனவும் அவர்கள் கோரினர்.

அலிகார் பல்கலைக்கழக மாணவர்களும், பேராசிரியர்களும் பாகிஸ்தானின் செய்கைக்குக் கண்டனம் தெரிவித்தனர்.

இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் பாகிஸ்தான் தலையிடுவது தவறானதாகும். இவ்விமான செயல் வருத்தத்திற்குரியதென இஸ்லாமபாத்திலுள்ள இந்தியத் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## இஞ்சிப்பாண் காதல் சின்னம்

பேர்லின், பெப். 6

''இஞ்சிப்பாண்'' ஜெர்மனியில் நீண்ட வரலாறுள்ள ஓர் உணவுவகையாகும். 13-ம் நூற்றாண்டில் வசித்த வீர புருஷர்கள் தங்களின் காதலிகளுக்குக் காதலின் சின்னமாக ''இஞ்சிப்பாண்''களை பரிசாகவழங்கினர். இது அக்காலத்தில் காதலிகளுக்குக் கொடுக்கும் காதல் கடிதமாக மிளிர்ந்தது.

இப்பொழுது இந்தப் பாண்வகை ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் கிறிஸ்மஸ் விழாவில் முக்கிய ஸ்தானம் வகிக்கின்றது. இஞ்சிப்பாண் தயாரிக்கப்பட்ட புராதன பேக்கரி ஒன்று வெயிசன்பெர்க் நூதனசாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

## அண்ணா விழாவில் கல் வீசிய ஐவர் கைது!

யாழ்ப்பாணம், ஞாயிறு

கந்தரோடையில் நடைபெற்ற அண்ணா விழாவில் கல் எறிந்தவர்கள் எனச் சொல்லப்படும் ஐவரை சுன்னாகம் பொலிசார் கைது செய்து பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

அண்ணா நினைவு விழாவில் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசும்போது இக்கல்லெறிச் சம்பவம் நடைபெற்றதாம்.

## 30 பேர் பலியாகினர்

டெஹ்ரான், பெப் 7

ஈரானில் பிரயாணிகள் வண்டியொன்று மலைப்பிரதேசத்தில் போய்க்கொண்டிருக்கையில் பாதையை விட்டுவிலகி பள்ளத்தாக்கில் விழுந்ததால் 30 பேர் பலியானார்கள், 20 பேர் வரை காயமடைந்தார்கள். வடமேற்கு ஈரானில் இது நடந்தது.

## தீர்மானம்

நல்லூர், ஞாயிறு

வலி. கிழக்கு தமிழ் ஆசிரியர் சங்கம் உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையை இந்துக் கல்லூரியுடன் இணைப்பதனை ஆட்சேபித்திருப்பதுடன் தொடர்ந்தும் தற்போதுள்ள அந்தஸ்தில் பாடசாலை இயங்க வேண்டுமென்றும் வடமாநில வித்தியாதிபதியை கேட்டுள்ளது.


கையிருப்பில் கிடைக்கும்

வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

WALKER-WOLSELEY நீர்ப்பாசன பம்புகள்

- மணிக்கு 10,000 கலன்
- குறைந்த இயக்கச் செலவு
- பராமரிப்புச் சுலபம்



2'' பெற்ரோல் / மண்ணெண்ணெய் பம்ப்

நீர்ப்பாசன, மற்றும் பொதுவான இறைப்பு வேலைகளுக்கான பிரசித்திபெற்ற நம்பகமான வாக்கர் வுல்ஸ்லி பெற்ரோல்/ மண்ணெண்ணெய் யந்திரங்கள் இப்பொழுது வாக்கர் இன்டஸ்ரீஸ் (சிலோன்) லிமிட்டெட்டால் இலங்கையில் தயாரிக்கப்படுகின்றன.

WI வாக்கர் இன்டஸ்ட்ரீஸ் தயாரிப்பு

பக்குவமான பராமரிப்பு ஊழியர்களுடன் சகலவித உதிரிப்பாகங்களும்.

வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

இல; 37/39, ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம்

தொடர்பு கொள்க:

திரு. ஏ. ஸி. ஜோசெப் (மனேஜர்)

தொலைபேசி- 7031


## விமானப்பிரயாணிகள் பொருட்கள் சோதனைக்குள்ளாகும்

சென்னை, ஜனவரி 6

சென்னையிலிருந்து பம்பாய் போன்ற இடங்களுக்கு விமான மூலம் பயணம் செய்யும்பிரயாணிகளின் பொருட்களை நன்றாகப் பரிசோதனை செய்யவேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்திய ஏயர் சேவையைச் சேர்ந்த போக்கர் விமானமொன்றை பாகிஸ்தானுக்குக் கடத்திச் சென்றதையடுத்து முன்னெச்சரிக்கையாக இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## பாக். மக்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யாதீர்

-- இந்திரா

கல்கத்தா, பெப் 7

இந்திய விமானக் கடத்தல் விடயத்தில் பாகிஸ்தான் நடந்து கொண்ட முறை பற்றி ஆர்ப்பாட்டம் செய்யும் பொழுது, அதுவன்முறையாகமல் பார்ப்பதோடு, பாகிஸ்தான் மக்களுக்கு விரோதமானதாகவும் இருக்கக் கூடாது.

இவ்வாறு கல்கத்தாவில் நடந்த பொதுக் கூட்டமொன்றில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, கல்கத்தாவில் சில காலமாக வன்முறைகள் நடந்த வண்ணமாக இருக்கின்றன. பெருமளவு வேலை வாய்ப்பும் இங்கு அளிக்கப்படவில்லை. இப்பகுதி நெடுங்காலமாகப் புறக்கணிக்கப்பட்டு வந்தபோதிலும் இப்பொழுது சரிசெய்யப்பட்டு வருகிறது. என்றார்.

## கல்லிலிருந்து நூல்

கோட்டை, ஞாயிறு

சுண்ணக்கல்லிலிருந்து நூல் எடுப்பதற்கான ஆய்வு நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

அடுத்தமாதம் இங்கு வரவிருக்கும் வடகொரியா நிபுணரின் உதவியோடுமேற்படி கல்லிலிருந்து நூலெடுக்கும் திட்டம் செயல்படுத்தப்படவிருக்கிறது.

கொரியாவில் பல ஆண்டுகளாக சுண்ணக்கல்லிலிருந்துசெயற்கை நூல் உற்பத்தி செய்து வருகிறார்கள் என அறியக்கிடக்கிறது. இலங்கையிலுள்ள சுண்ணக்கற்கள் இந்த செயற்கை நூலுற்பத்திக்குசிறந்ததென கொரியா நிபுணர்கள் தெரிவித்துள்ளார்கள்.

## இந்திய தேர்தல் எதிர்க்கட்சி நிட்மனு

புதுடில்லி ஜனவரி 6

இந்திய தேர்தலில் ஆளும் கட்சியினர் தமது செல்வாக்கைப் பயன்படுத்தக்கூடாதென்று கோரும் நிட்மனுவொன்றை 5 எதிர்க்கட்சியினர் இன்று தாக்கல் செய்துள்ளனர்.

சம்யுக்த சோஷலிஸ்ட் நிஜலிங்கப்பா தலைமைக்காங்கிரஸ், சுதந்திரா, ஜனசங் ஆகியகட்சியினரே இந்த நிட்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

இம்மனுவில்இடைக்காலத் தடையுத்தரவையும் கோரியுள்ளனர்.

## தமிழ் நாட்டில் புதிய கட்சி

சென்னை, பெப். 7

'தமிழ் நாடு காங்கிரஸ் கட்சி' என ஒரு புதிய கட்சி தமிழ் நாட்டில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கட்சியின் அமைப்பாளராக திரு சி கஜேந்திரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துடன் ஜெகஜீவன்ராம் தலைமைக் காங்கிரஸ் செய்துகொண்ட தேர்தல் உடன்பாட்டில் அதிருப்தி கொண்ட காங்கிரஸ் காரர்களே இக்கட்சியை அமைத்துள்ளனர் எனச் சொல்லப்படுகிறது.

### மணிவாக்கு

காந்த ஊசியானது எப்பொழுதும் வடக்கு நோக்கியே நிற்கின்றது. ஆகலால்தான் கடலில் செல்லும் கப்பல் திசை தவறுவதில்லை. மனிதனுடைய உள்ளம் கடவுளை நோக்கியதாக இருக்கும் வரையில் லௌகிகப்பற்று ஆகிய சமுத்திரத்தில் அவன் வழிதவறிக் கெடமாட்டான். —பரமஹம்ஸர்.


# ஈழநாடு

Eelanadu ... Jaffna Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box 49, Jaffna, Telephone 889

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் தை மாதம் 26-ந் திகதி (8-2-71)


## கமிட்டிகள்!

பாடசாலைகள், கல்லூரிகளுக்கு மாணவர்களை அனுமதிப்பது சம்பந்தமாக ஒரு தீர்மானம் நிறைவேற்றிச் சிபார்சு செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனதா கமிட்டி' எனப்படும் 'மக்கள் குழுக்கள்' யாவும் கலைக்கப்பட்டுவிட்டதாக ஒரு செய்தி கூறுகிறது. கல்வி அமைச்சின் உத்தரவின் மீது இக்குழுக்கள் கலைக்கப்பட்டுள்ளனவாம். இதுவரை இக்குழுக்கள் ஆற்றிய பணிகளுக்காக கல்வி அமைச்சு நன்றியும் தெரிவித்திருக்கிறது. இந்தக் குழுக்கள் ஏன் கலைக்கப்பட்டன?

இந்த ஜனதாக்குழுக்கள் நியமிக்கப்பட்ட பொழுது மாணவர் அனுமதியில் இது வரையில் காட்டப்பட்டுவந்த பாகுபாடுகளுக்கு இனி இடமிருக்காதென்றும் இது நல்ல திட்டமென்றும் பலரும் பொதுவாக வரவேற்றனர். இந்தக் குழுக்கள் செயல்படத் தொடங்கியதும் பல இடங்களிலும் பெற்றோரும் மாணவரும் 'பாரபட்சம்' பற்றியும் அவற்றின் செயல்கள் பற்றியும் புகார் கூறத்தொடங்கினர். இது பின்னர் வலுப்பெற்றது. 'ஜனதாக் கமிட்டிகளைக் கலையுங்கள்' என்ற கோரிக்கையும் எழத்தொடங்கியது. இப்போது அது நிறைவேறியும்விட்டது.

இந்தக்கமிட்டிகளை அமைப்பதற்கான நோக்கம் தவறென்று கூறமுடியாது. ஆனால் அவை அமைக்கப்பட்ட முறையும் அதில் அங்கம் வகிக்கவேண்டியவர்கள் தெரிவுசெய்யப்பட்ட முறையும்தான் இப்படி மடியக் காரணம்.

இந்த 'ஜனதாக் கமிட்டிகள் மட்டுமல்ல ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள வேறு சில குழுக்களும் இனி அமைக்கப்படவிருக்கும் குழுக்களும் கூட அவை எந்த நோக்கத்துக்காக அமைக்கப்படுகின்றனவோ அதைச் சரியான முறையில் நிறைவேற்றத் தவறினால் 'இந்த ஜனதா' கமிட்டிக்கு ஏற்பட்ட கதியே ஏற்படுமென்பதை அரசாங்கம் நினைவில் கொள்வது நல்லது.

கட்சி அரசியல் நோக்கத்தை மட்டும் கருதி, தேர்தல் காலத்தில் செய்தஉதவிகளுக்காக நன்றிக்கடன் செலுத்தும் நோக்கத்துடன் முன்னைய அரசாங்கமும் சில விஷயங்களில் நடந்துகொண்டது. அதன் விளைவை கடந்த மே மாதம் அது அனுபவிக்க வேண்டியேற்பட்டது.

கட்சி அரசியல்தான் இப்போது அந்த ஜனதாக்குழுக்களுக்கும் முடிவு ஏற்படக் காரணம். கட்சி அரசியலை மட்டும் கருத்தில் கொள்ளாமல் நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் மேற்கொள்ளும் திட்டங்களையும் அதன் கொள்கைகளையும் செயற்படுத்துவதற்கு தகுதியும் திறமையும் நேர்மையும் உள்ளவர்களை அந்தந்தப் பொறுப்பில் வைக்க வேண்டும். இதர குழுக்கள் சரியாகத் தமது கடமையைச் செய்வதற்கும் அரசாங்கம் தனது கொள்கைத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கும் இந்த 'ஜனதா கமிட்டி' விவகாரம் ஒரு நல்ல பாடமாக இருக்கவேண்டும்.

## 'கம்யூனிஸ்ட் பூச்சாண்டி: மக்கள் அனுமதியார்'

யாழ்ப்பாணம், திங்கள் "ஐக்கியதேசியக் கட்சியின் தலைமையிலான அரசாங்கங்கள் தனிநபர் உரிமையையே பாதுகாத்துவந்தது. ஆனால் நாடும் பொதுமக்களும் எவ்வித முன்னேற்றத்தையும் அடையவில்லை. ஒருசில பணக்கார வர்க்கமே மக்களைச் சுரண்டி சுரண்டி சுகபோகத்தை அனுபவித்து முன்னேறினார்கள். இப்பாதையில் மக்கள் முன்னேற முடியாது என்பதை உணர்ந்து பொதுத்தேர்தலில் நல்ல தீர்ப்பை அளித்திருக்கிறார்கள். இத்தீர்ப்பை கம்யூனிஸ்ட் பூச்சாண்டி காட்டியோ மறைமுகமாகவோ நிராகரிக்க மக்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள்"

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வட பிரதேச அமைப்பாளர் திரு அ. வைத்திலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்

தமிழ்காங்கிரஸ் செயலாளர்களில் ஒருவரான திரு. ரி. சங்கரப்பிள்ளை வெளியிட்ட அறிக்கையொன்றுக்குப் பதில் அறிக்கையாகவே இதனை வெளியிட்டிருக்கிறார்.

திரு. வைத்திலிங்கம் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"சோசலிசம் என்ற போர்வையில் கம்யூனிஸ்ட் கொள்கைகள் அரசியல் சாசனம் பற்றி வெளியிடப்பட்டுள்ள அடிப்படைத் தீர்மானங்களில் இடம் பெற்றுள்ளன. இவை ஜனநாயகத்திற்கு முழுக்க முழுக்க முரண்பாடாகவுள்ளன" என்று திரு. சங்கரப்பிள்ளை குறிப்பிட்டிருக்கின்றார்.

இன்றைய முக்கூட்டு முன்னணியின் பிரச்னை உண்மையான ஜனநாயகத்தை மக்களாலும் அரசாங்கத்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தை அமுல் நடத்துவதென்று உறுதிப்படுத்துவதேயாகும்.

பெரும்பான்மையான மக்களின் நலவுரிமைகளைப் பாதுகாப்பதோ அல்லது வெளிநாட்டு உள்நாட்டுப் பெரிய முதலாளிகளின் சுரண்டலை உறுதிப்படுத்துவதோ இதுவே எம்முன் உள்ள பிரச்னை.

ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் உரிமை பிரதமருக்கு இருக்கக்கூடாதாம். பொதுமக்களே நேராகவோ மறைமுகமாகவோ ஜனாதிபதியைத் தெரிவுசெய்ய வேண்டுமாம். அவரின் கருத்து இரட்டை ஆட்சிக்கு

# சமத்துவத்தைப் போலவே கண்ணியமும்காக்கப் படவேண்டும்

**அரசியல் திட்டத்தின் அடிப்படைத் தீர்மானங்களில் செய்ய வேண்டிய திருத்தங்கள் குறித்து யாழ்ப்பாண மகாநாட்டின் சார்பில் திரு. நேசையா அரசியல் திட்ட விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி.சில்வாவுக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கையின் ஒரு பகுதி நேற்று பிரசுரமானது. இன்று அதன் மிகுதி இங்கு தரப்படுகிறது.**

கே.நேசையா

அரசின் கொள்கையின் தத்துவம்
(தீர்மானம் 4)

அடிப்படை உரிமைகளின் அத்தியாயத்தில் உள்ளி உரிமைகளின் தரத்திலிருந்தே அரசினதும் பிரஜைகளினதும் ஒன்று கூடிய கடமைகளை யாம் உயத்துணர்ந்து கொள்ளுகிறோம். அத்தியாயங்களின் வரிசை தர்க்க ரீதியாக அங்கு இருத்தல் வேண்டும். எங்கள் முந்திய மகஜரில் சொல்லியபடி, உரிமைகளின் அத்தியாயத் தொடரும் அரசியல் கொள்கையின் உத்தரவுத் தத்துவங்கள் 70-ம் பத்தாண்டுக்கும் அதனைத் தொடரும் பத்தாண்டுகளுக்கும் அரசின் கொள்கையின் வரைவு அறிகையாகக் கருதப்படும்.

இப்போதிருப்பதிலும் சிறந்த சமுதாய அமைப்பைப் பெறுவதில் அரசின் கொள்கை ஒரு திறவுகோல் போன்று விளங்கும், என்பது உண்மையேயாயினும் அரசின் முக்கிய கடமைதான் எல்லாவற்றையும் கொடுப்பதென்றதல்ல ப சௌகரியங்களையும் நிலைமைகளையும் மக்களுக்கும் பெற்றுத் தருவதாகும். ஏனெனில் அரசிலும் பார்க்க சமுதாய வளர்ச்சியில் தேசிய வாழ்க்கை செல்வமுறச் செய்வதையும் தாமாக முன்வந்து உழைக்கும் எல்லாவிதமான சங்கங்களின் வளர்ச்சியையுமே நாம் விரும்புகிறோம். தனது பிரஜைகளை பசி, அசுத்தம் அறியாமை, ஆரோக்கியமின்மை நோய் என்பவற்றிலிருந்து விடுவிப்பதும் எல்லோருக்கும் தருணங்களும்

வழிவகுக்கும். மக்களினது ஆதிபத்திய உரிமையையும் அவர்களால் தெரிவுசெய்யப்பட்ட தேசியசபையின் அதிகாரத்தையும் இரட்டை ஆட்சிக்கு வழிகோலும் யோசனை பாதிக்கும். தேசிய சபைக்கும் ஜனாதிபதிக்குமிடையில் அபிப்பிராய வித்தியாசங்கள் வரின் தேசியசபையின் முடிவே செயல்படவேண்டும். இதன் பிரதிபலிப்பே ஜனாதிபதி நியமனம் பற்றிய அரசியல் சாசனம் பற்றிய தீர்மானங்களின் நோக்கமாகும். ஜனாதிபதியும் பிரதமரும் தேசிய சபையின் நம்பிக்கையை பெற்றவராயிருப்பது மிகவும் அவசியம். நாடு தடங்கலின்றி மக்களின் தீர்ப்பிற்கிணங்க முன்னேற வழி வகுக்கும்.

அரசியல் அமைப்புச் சட்டம் அரசியல் நிர்ணயசபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின் பொதுசன வாக்கெடுப்பிற்கு விடவேண்டுமாம்.

அரசியல் அமைப்புப் பற்றி பொதுசன அபிப்பிராயம் எவ்விதம் பெறப்படும் என்பதை அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் வெளிப்படுத்தியிருக்கிறார். அரசியல் அமைப்புப் பற்றிய தீர்மானங்கள் பொதுமக்களின் அபிப்பிராயத்திற்கு விடப்பட்டிருக்கின்றன. அந்த அபிப்பிராயங்களை அரசியல் நிர்ணயசபை பரிசீலனை செய்யும். நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் மேல் வாக்கெடுப்பிலும் பார்க்க இது மிகவும் சிறந்தது. இதன்மூலம் மக்கள் அபிப்பிராயம் பெறப்படுகின்றது. அத்துடன் அமைப்புச் சட்டத்தை உருவாக்குவதில் மக்களும் பங்குபற்றுகின்றனர்.

சிலாக்கியங்களும் சமமாக்கப்படுவதைப் பார்த்துக் கொள்வதும் ஒரு நல்லரசின் முதலாவது கடமையாகும் ஆயின் தனிப்பட்டவரின் சமத்துவத்தைப் போலவே அவரது கண்ணியமும் பாதுகாக்கப்படவேண்டும். பிரஜையை ஒரு நோக்கமாக கொள்ளவேண்டுமேயன்றிச் சாதனமாகக் கொள்ளக் கூடாது. தனது நல்வாழ்க்கை எல்லாராலும் மனப் பூர்வமாகப்பங்கு பற்றப்படும் ஒரு சமுதாயத்தில் சுய நிறைவை ஒரு பிரஜை பெற வேண்டும். பிரஜைகள் ஒருவர் ஒருவருக்குரியவர்களாய் அரசின் இளைப் பாற்றுச்சம்பளம் பெறுபவர்களாயில்லாமல் அரசின்பங்காளிகளாய் மக்கள் இருத்தல் உறுப்பமைந்த சமுதாயத்திலேயே அமையும். உண்மையான சோஷலிசம் மேலிருந்து திணிக்கப்படுவதன்று. சனங்கள் அதை வேண்டுமென்று விரும்ப வேண்டும்' நல்ல சமுதாய அடிப்படையிலேயே உண்மையான நல்லரசு அத்திவாரங்களாகவேண்டும். ஏ. டி. லிண்ட்சே என்பவர் சொல்லுவதுபோல சமுதாயத்தை மேலும் அதிக சமூகத் தன்மை பெறச் செய்வதும் மேலும்அதிகஜனநாயகசமூக

தன்மைபெறச் செய்வதுமே அரசின் முதலாவது வேலையாகும். ஓர் இந்திய எழுத்தாளர் எழுதுவதுபோல, சமுதாயத்தை மாற்றுதற்குத் தூங்கிக்கொண்டிருக்கும் மக்கள் மத்தியில் ஒரு புரட்சி மனவுறுதியைச் சிருஷ்டிப்பது அதன் கடமை.

நாட்டின்ஒவ்வொரு பகுதியிலும் பெருந்தொகையினர் நல்லவாழ்க்கையில் போதிய பங்கு பெறுதவர்களாய், நல்ல வாழ்க்கையைத்தேடுதற்குத் தூண்டக்கூடிய போதிய கல்வியில்லாதவர்களாய் இருக்கிறார்களென்பது புனைந்துரையாகாது. எனினும் பலாத்காரத்தாலேனும், வகுப்பு, சாதிப்பிரிவுகளை வளர்ப்பதாலேனும் வெறும் சட்ட அமைப்புகளாலேனும் ஒரு சமுதாயத்தைக் கட்டி எழுப்பமுடியாது சமூகத்தைப் புதிதாக அமைப்பதற்குரிய நிறுவனமே பலமான வழியாகும். பலவற்றை உட்கொண்ட சமுதாய முறையில் அமைந்த நிறுவனமே சமூகத்தின் வாழ்க்

கையிற் பிணைப்புள்ள ப... களை மேற்கொண்டுள்... தாய், தன்னளவில் ஒ... சமூகமாய்த்தன்னை அமை... துக்கொண்டதாய் உள்... நிறுவனமே சமுதாய மா... றத்துக்கும் அம்மாற்ற... துக்குவேண்டிய குறிக்கோ... களைப்போதிப்பதற்கும் அ... வற்ற உதவிபுரிதல்கூடு... இதற்குப் பெருந்துணையா... ஜனநாயக, சோஷலி... மதச்சார்பற்ற சமுதா... த்தை அமைப்பதற்கு உ... வக்கூடியது தேசத்தி... தானாக முன்வந்துழைக்கு... பெரிய ஜனநாயக சங்கம... கிய கூட்டுறவு இயக்கமே... யாகும். இதற்கு எங்க... அரசியல் ஞானிகள் கூட்... றவு ஜனநாயகத்தின் சா... தேச முறையில் அங்கீகரி... கப்பட்ட தத்துவங்களுக்... மதிப்புக்கொடுக்க வேண்டு... ஏனெனில் அதனது சட்ட... படி செல்லக்கூடிய பொ... ளாதார உறுதி ஒருபுறமி... க்க கூட்டுறவு இந்த நா... டில் அரசை நடத்தும் கலை... கும் முறைக்கும் பெரிது... புதியஉதவியளிக்கக்கூடிய...

தேசிய ஒற்றுமையைப் பலப்படுத்துதல் அரச... கொள்கையின் முக்கிய நோ... க்கமாக இருத்தல் வே... டும். சட்டத்தா... ஒற்... மையை உண்டா... மு... யாது. ஏனெனில் ... யில் எண்ணிக்கையில் ... கமான ஒரு சமூகம் ... ஒருசமூகத்தைப் ... வந்தப் படுத்தல் தேசி... ஒற்றுமைக்குத் தடை வி... க்கக் கூடியதாயிருக்கு... அதுபோலவே இரு மொ... பினங்களுக்கிடையே சம்ப... ஷயில்லாதிருந்தாலு... ஆகும். இதற்கு மாறாக ப... மனை முறையிலும் பா... சாலைகளிலும் தேசிய வா... விலும் இரு மொழிக... யைாளப் படுவதன்மூல... பிளவில்லாத இலங்கைக்கு... பிளவில்லாத மக்களாக... சிங்களம் பேசுவோரும் த... ழ்ப் பேசுவோரும் தம்... ஆக்கிக் கொள்ள முடியு... நான்கு சமயங்கள் ஒ... மக்கள் இரு மொழிக... ஓரே குரல் என்ற இலட்... யங் கைகூடும்.

### தேசிய சபை

மத்திய அரசாங்கத்தின் அ... காரத்தைப் பிரித்து மாகாண... ளுக்குக் கொடுத்தல் வேண்டு... (தீர்மானம் 6-10, 20, 2...

இப்போதைய தேசி... சபை அரசியல் யாப்... நிறைவேற்றப் பட்ட தி... யிலிருந்து ஆறு ஆண்டுக... க்குப் பணியாற்ற வ... கோலும் 7-வது தீர்மா... த்தை நாம் தள்ளுபடி செ... யலாம். இப்போதைய பார... ளுமன்ற உறுப்பினர்க... தாம் தெரிவு செய்யப்பட்... திகதியிலிருந்து ஐந்து ஆ... டுகளுக்குப் பணியாற்ற... அதிகாரம் பெற்றவர்க... புதிய அரசியல் யாப்பு இ... வாறு ஒரு கூடாத மு... மாதிரியை உண்டாக்குவ... நல்ல தொடக்கமாகா... எங்ஙனமாயினும் எந்த... பாராளுமன்றத்துக்கும்தா... 'சுதந்திரமாகத் தெரி...

## வடக்கு அபிவிருத்திக்கு 80 லட்சம் ரூபாய்!

### அரசாங்க அதிபர் தகவல்

மாவிட்டபுரம், ஞாயிறு 'இன்றுநாட்டில் பலமாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. சுதந்திரம் பெற்று, அபிவிருத்தியடைந்த நாடுகளில் எல்லாம் இப்படிப் புதிய மாற்றங்கள் ஏற்படுத்தான் சுதந்திரம் பெற்றன. இதே போல்தான் அரசு புதிய மாற்றங்களை இங்கு செய்துவருகிறது.'

இவ்வாறு யாழ் அரசாங்க அதிபர் விமல் அமரசேகரா அளவெட்டி அருணோதயாக் கல்லூரி விளையாட்டுமைதானத்தில் நடந்த வலி-வடக்குக் காரியாதிகாரி பிரிவு சுதந்திரதின விழாவில் பேசுகையில் கூறினார்.

காரியாதிகாரி திரு.பி எல் பற்றிக்ஸ் தலைமையில் நடந்த இக் கூட்டதில் அவர் தொடர்ந்து பேசுகையில்:-

இன்றைய நிலையில் வேலையில்லாப்பிரச்னையை எப்படி தீர்க்கலாம், விலைவாசி உயர்வை எப்படிக் கட்டுப்படுத்தலாம் என்று சிந்திக்க வேண்டும். அரசு வடமாகாணத்துக்கு 80 லட்சம் ரூபாவை அபிவிருத்திக்கு ஒதுக்கியுள்ளது. இப்பணம் செலவிடப்பட்டு அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படும் போது எவருக்கும் பாரபட்சம் காட்டப்படமாட்டாது என்றார்.

கம்யூனிஸ்ட் கட்சி வடபிரதேச செயலாளர் திரு. வ. பொன்னம்பலம் பேசுகையில் நாம்சுதந்திரம் பெற்றும் சிறப்பாக வாழமுடியாததற்கு ஒரு காரணம்எம் நாட்டில் அன்றைய ஏகாதிபத்தியங்கள் காட்டும் அதிகாரமாகும். இந்த அதிகாரத்தை முற்றாக முறியடித்து சுதந்திரமானநாடாக்க குடியரசுத் திட்டம் அமுல்நடாத்தப்படவிருக்கிறது. ஸ்ரீமா தலைமையில் இயங்கும் அரசு புதிய திட்டங்களை தீட்டி சகல துறையிலும் மக்களை முன்னேற்றும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்மக்கள்எதிர்பார்த்த அளவு இங்கு அரசு செய்யவில்லைஎன்பது உண்மைதான் இன்றையநாடுபெரும் கஸ்டத்தில் எமது பகுதிக்கு செய்யப்படும் உதவிகள் கூடுதலாக இருக்கிறது.

இங்குள்ள பிரச்சனைகளைத் தீர்க்க அரசு எத்தனையோ திட்டங்களை தீட்டியுள்ளது அவற்றை நிறைவேற்ற மக்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றார்.

முன்னாள் செனட்டர் திரு பி. நாகலிங்கம் பேசுகையில் இன்றைய தமிழ் அரசியல் வாதிகள்உணர்ச்சிவசப்பட்டு போராட்டங்கள் நடத்த முனைகின்றனர். சேர் பொன் இராமநாதன், பாலசிங்கம் போன்றவர்கள் உணர்ச்சி வசப்பட்டு செயல்பட்டார்களா? தமிழ்மகனுக அவர்கள் பிறந்தபோதும் அவர்கள் வகுப்புவாதத்தை வளர்த்தார்களா? அவர்களை இன்றும் சிங்கள வர்கள் போற்றுகிறார்கள் ஆகவே தமிழ்மக்களின் தலைவர்கள் உணர்ச்சி வசப்படாது செயல்பட வேண்டும் என்றார்.

மற்றும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அதிபர் திரு ஆனந்தகுமாரசாமி, எம் சிதம்பரநாதன் உ... படப்பளர் உரையாற்றினார்கள்.

கிராம அபிவிருத்தி உத்... யோகஸ்தர் திரு ஜெயர... தினம் நன்றிகூறினர்.

...வ
...ண்டும்

...செய்ய ...நாட்டின் ...அமைச்சர் ...வத்துள்ள ... இன்று

...பிணைப்புள்ள பணி ...மேற்கொண்டுள்ள ...ன்னளவில் ஒரு ...த்தலீன அமைதி ...டதாய் உள்ள ...ம சமுதாய மாற் ...ம் அம்மாற்றத் ...ண்டிய குறிக்கோள் ...திப்பதற்கும் அள ...உதவிபுரிதல்கூடும். ...பெருந்துணையாய் ..., சோஷலிச ...ற்ற சமுதாய ...மைப்பதற்கு உத ...ு தேசத்தின் ...முன்வந்துழைக்கும் ...னநாயக சங்கமா ...றவு இயக்கமே ...இதற்கு எங்கள் ...ஞானிகள் கூட்டு ...நாயகத்தின் சர்வ ...றயில் அங்கீகரிக் ...தத்துவங்களுக்கு ...காடுக்க வேண்டும் ...அதனது சட்டப் ...க்கூடிய பொரு ...உறுதி ஒருபுற மிரு ...றவு இந்த நாட் ...ச நடத்தும் கலைக் ...க்கும் பெரிதும் ...வெளிக்கக்கூடியது. ...ஒற்றுமையைப் ...துதல் அரசக் ...யின் முக்கிய நோ ...இருத்தல் வேண் ...டத்தா ஒற்று ...உண்ட... முடி ...னனிட... உண்மை ...ணிக்கையில் அதி ...ரு சமூகம் மற் ...முகத்தைப் பல ...படுத்தல் தேசிய ...குத் தடை வினை ...கூடியதாயிருக்கும். ...வே இரு மொழி ...க்கிடையே சம்பா ...லாதிருந்தாலும் ...தற்கு மாறாக பரு ...றையிலும் பாட ...லும் தேசிய வாழ் ...ு மொழிகள் ...படுவதன்மூலமே ...த இலங்கைக்குப் ...த மக்களாகச் ...பேசுவோரும் தமி ...வோரும் தம்மை ...ாள்ள முடியும். ...சமயங்கள் ஒரே ...இரு மொழிகள் ...என்ற இலட்சி ...டும்.

...சபை

...ரசாங்கத்தின் அதி ...பிரித்து மாகாணங்க ...காடுத்தல் வேண்டும் ...ம் 6-10, 20, 22) ...தைய தேசிய ...சியல் யாப்பு ...றப் பட்ட திகதி ...ஆறு ஆண்டுகளு ...ியாற்ற வழி ...7-வது தீர்மான ...ம் தன்னுபடி செய் ...ப்போதைய பாரா ...உறுப்பினர்கள் ...வு செய்யப்பட்ட ...ந்து ஐந்து ஆண் ...பணியாற்றவே ...பெற்றவர்கள். ...சியல் யாப்பு இவ் ...கூடாது முன் ...உண்டாக்குவது ...தொடக்கமாகாது. ...யினும் எந்தப் ...ன்றத்துக்கும்தாம் ...ாகத் தெரிவு

...பரநாதன் உட் ...உரையாற்றினர்

...பிவிருத்தி உத்தி ...் திரு ஜெஹரத் ...றிகூறினர்.

செய்யப் பெற்ற பிரதிநிதிகள்' என்று உரிமை பாராட்டுதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் மிக நீண்ட காலமாகும். 'ஸ்ரீ லங்கா மக்களின் இறைமை தேசிய சபை மூலமே நடாத்தப்படும்' என்று எவ்வித நியந்தனைகளுக்கும் உட்படாது கூறும் 6-வது தீர்மானத்தையும் யாம் ஆட்சேபிக்கிறோம். இப்போதுள்ள கட்சி முறைப்படி ஒரு கட்சி பாராளுமன்றத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றுகிறது. அதே பருமனை கட்சி முறையில் அக்கட்சிக்குள் ஒரு சிறு பிரிவினர் மற்ற உறுப்பினரைக் கலந்தாலோசியாமலே நிர்வகிக்கலாம். 'தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்களின்' என்றும் முடியாத இந்த மஞ்சௌரியம் பழைய நில மானிய முறையில் நடந்த சிலரது ஆட்சி முறையிலிருந்தும் இக்காலத்தைய சர்வாதிகார ஆட்சி முறையிலிருந்தும் அதிக வேறுபாடுடையதன்று மகாத்மாக் காந்தி சொன்னது போல உண்மையான ஜனநாயகம் மத்தியில் இருக்கும் இருபது பேரால் நடாத்தப்படுவதன்று' தெரிவு செய்யப்பட்ட சட்ட சபை மக்களின் விருப்பத்தைக் கடைசியாகப் பதிவு செய்யும் இடைக்கக் கூடிய தனி உறுப்பாக அமையலாம் ஆனல் பொதுசன வாழ்வின் போக்கைக் கண்டு பிடித்தாலும் கொள்கையினதும் சட்டங்கள் ஏற்படுத்துவதினதும் உண்மையான சிருஷ்டி முறையும் மக்கள் நேரில் பங்குபற்றக் கூடிய கீழ்ச் சபைகளிடம் இருக்க வேண்டும். அதாவது கடைசிச் சட்ட ஆக்க முறை அதற்கு முந்திய ஜனநாயக முறையிலிருந்து அங்கீகாரம் பெற்றதாயிருத்தல் வேண்டும்.

எங்கள் பழைய விசேட அரசியல் திறமையின் மேலான கண்டுபிடிக்கலாகிய ஏகமனதாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட கட்சி முறையில்லாத கிராமசபைகளை இங்கு யாம் குறிப்பிட விரும்புகின்றோம் சமுதாயத்தை உண்மையில் உதிக்கச் செய்யவல்லது, இந்த விதத்திலே பணியாற்றும் ஒரு சபையேயாகும். இதனாலேயே "ஐவரின் குரல் ஆண்டவன் குரல்" என்ற பழமொழி எழுந்தது. கீழே உள்ள நிலையில் ஆலோசனைச் சபைகள் உயர்ந்து சென்று பூர்த்தியாகக்கூடிய வகையில் தேர்தற் தொகுதி ஆலோசனைச்சபைகளும்டிஸ்திறிக் ஆலோசனை சபைகளும் நிறுவப்படுமாயின், அவையும் உறுப்புகளாலமைந்த சமுதாயத்தை உதிக்கச் செய்யவல்லன. தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களாலே தெரிந்தெடுத்துச் சேர்க்கப்பட்ட அங்கத்தவர்கள் இருக்கலாம் இவ்விதமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆலோசனைச் சபைகளும் காரியக் குழுக்களுமே உண்மையான "மக்கள் குழுக்களாகும். மக்கள் குழுக்கள் மேலேயிருந்து சுமத்தப் படுவனவின்றி பேட்றண்ட்றசெல் சொல்வது போல இன்னும் கிராம சபை நாகனாகவுள்ள தேசங்களில் கைத்தொழில் திமைகளைத் தவிர்த்துக் கைத்தொழிலிலும் ஒரு ஜனநாயக அடிப்படையாகக் கையாளலாம். புதிய இடைப்பட்ட தொழில் முறை அதிகாரங்களைச் சிறிய உற்பத்தி நிறுவனங்களுக்குப் பிரித்துக்கொடுக்கும் கைத்தொழிலுக்கு உதவும்

இந்த முறையிலேதான் இலங்கை உயிருணர்ச்சியைப் பெற்று அரசியல் துறையிலும் பொருளாதாரத்துறையிலும் ஜனநாயகக் கொள்கைக்குத் தனது முதலாயமைந்த சுய உதவியை அளிக்கலாம் போலும்:

## மின்கணித விஞ்ஞானி வருகிருர்

கொழும்பு, பெப் 7

பிரபல பிரிட்டிஷ் மின் கணித (கம்யூட்டர்) விஞ்ஞானியாகிய பேராசிரியர் ஆர். ஏ. பக்கிங்ஹம் இம்மாதம் இலங்கைக்கு விஜயம் செய்வார். மின்கணிதகல்வி பற்றி இலங்கைக்கு ஆலோசனை வழங்குவார்.

லண்டன் சர்வகலாசாலையைச் சேர்ந்த மின்கணித விஞ்ஞான நிறுவனத்தின் அதிபரான பேராசிரியர் பக்கிங்ஹம் இம்மாதம்20-ம் திகதியிலிருந்து 27-ம் திகதி வரை கொழும்பில் தங்கியிருப்பார்.

அவர் இங்கு தங்கியிருக்கும் வேளை மின்கணித திட்டங்களுடன் சம்பந்தப்பட்ட கல்வி இலாகா அதிகாரிகளை சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்துவார்.

அத்துடன் கொழும்பு பேராதனை வித்தியாலங்கார சர்வகலாசாலைகளுக்கும் விஜயம் செய்து மின்கணித நுட்பங்கள் பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்.

......

## 'அதிபர்களுடன் யோசியுங்கள்'

நல்லூர் ஞாயிறு

ஆசிரியர்களை இடமாற்றம் செய்யும்போது கல்லூரி அதிபர்களை கலந்தாலோசித்த பின்னரே மாற்றம் செய்யவேண்டுமென்றுகல்வி அதிபதியையும், ஆசிரியர் இடமாற்றச் சபையையும் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தினரால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

......

கோட்டை, ஞாயிறு

நீர்ப்பாசன மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சுக்கு வேண்டிய இயந்திரங்கள், உபகரணங்கள் ஆகியவற்றை ஆலோசனைச்சபையின் அங்கீகாரம் பெற்றே வாங்கவேண்டுமென நீர்ப்பாசன மின்சக்தி நெடுஞ்சாலை அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக உத்தரவிட்டுள்ளார்.

## இருகூடச்சட்ட மன்றம்

(தீர்மானம்-9)

ஒரு கட்சியால் ஆதிக்கம் செலுத்தப்படும் ஒரு பாராளுமன்றத்தில் பெரும்பான்மையினரின் தீர்ப்பு என்றும் அதுமக்களின் விருப்பம் ஆகும் என்றே சொல்வது மிக எளிதாகும். அரசவிருப்பத்தைச் சமுதாயவிருப்பத்தோடு சமரசஞ் செய்வதற்காகச்சனநாயக நாடுகளில் ஏற்படுத்தியுள்ள மட்டுப்படுத்தும் தடுப்பமைவுகளிலும் சமநிலைசெய்யும் முறைகளிலும் ஆலோசனை முறைகளிலும் முதற் கூடத்திலிருந்தும் வேறான தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டாவது கூடம் ஒன்று இருத்தல் வேண்டும். எங்கள் முந்திய மகஜரில் குறிப்பிட்டபடி. இரண்டாது கூடத்தின் (சபையின்) உறுப்பினர் தொகை ஏறத்தாழ முதலாவது கூட உறுப்பினர் தொகையின் பாதியாக இருக்க வேண்டும். மாகாண அடிப்படையில் மூன்றிலொரு பிரிவினர் கிராமச்சபைகளின் பிரதிநிதிகளைக் கொண்ட தொகுதிச்சபையிலிருந்து வரும் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகக் கொண்ட தேர்தல் கழகங்களால் தெரியப்படலாம். மூன்றில் மற்றொரு பிரிவினரை முதலாவதுகூட உறுப்பினரேமாகாண அடிப்படையில் தேர்ந்தெடுக்கலாம். எஞ்சிய மூன்றுவது பிரிவினரை தொழிற்சங்கங்களினதும் பிரதானமான தொழிற்கழகங்கள் தேர்தற் கழகங்கள் தேர்ந்தெடுக்கலால்.

5 லட்சம் பெறுமதியான

## சினிமாச் சுருள் கண்டுபிடிப்பு

கோட்டை, ஞாயிறு

சுமார் 5 லட்சம் பெறுமதியான சினிமாச் சுருள்கள் களனி ஆற்றிலிருந்து பொலிசாரால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இச்சுருள்கள் 50 ஆயிரம் அடி நீளமுடையது என்றும் வெளி நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டது என்றும் பொலிசார் கருதுகின்றனர். பொலிசார் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

......

அரசின் உதவிபெற

## தமிழரசு எம். பிக்கள் அனுமதி பெறவேண்டும்

புதுக்குடியிருப்பு, ஞாயிறு

தமது தொகுதித் தேவைகளுக்கு அரசாங்கத்தின் சலுகை தேவைப்படும் ஒவ்வொரு தமிழரசு எம். பிக்களும் கட்சியின் அங்கீகாரத்தை பெறவேண்டுமென்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருப்பதாக வவனியா எம். பி. திரு எக்ஸ் எம் செல்லத்தம்பு இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

புதுக்குடியிருப்பு புதுப்பிலவு ஐக்கிய நாணய சங்கத்தின் புதிய கட்டிடத்தை திரு செல்லத்தம்பு திறந்து வைத்துப் பேசினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

அரசாங்கம் தமிழ் மக்களின் உரிமைகளைக் கொடுத்தால் நாம் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கத் தயாராய் உள்ளோம், கூட்டுறவுச் சங்கங்களுக்கு தற்போதைய அரசாங்கம்பல உதவிகளை வழங்கத் தயாராய்உள்ளது. இதை எல்லோரும்வரபெற்று தேவையானவற்றை வேற்றுநாட்டில் கூட்டுறவை வளர்க்கவேண்டும் என்றார்.

வவனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு எஸ் இராமநாதனும் பேசினர்.

......

## லைபீரியாவும் எதியோப்பியாவும் மறுப்பு

மொன்ரோவியா, பெப் 7

உகண்டாவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஜெனரல் அமீனின் தலைமையிலான அரசை லைபீரியாவும் எத்தியோப்பியாவும் அங்கீகரித்திருப்பதாக முன்பு வந்த செய்தியை இவ்விரு நாடுகளும் மறுத்திருக்கின்றன.

—— ——

## விமலாதாகர் வருகிருர்

கோட்டை, ஞாயிறு

பலநாடுகளுக்கும் சென்று ஆன்மீக ஒளியையும், தியானத்தின் அடிப்படைத் தத்துவங்களையும் பரப்பி வரும் திருமதி விமலாதாகர் இம்மாதம் 25-ந்திகதி இலங்கை வருகிருர்.

இவர், ஐரோப்பா, அமெரிக்கா, ஆசிய நாடுகளில் கடந்த 4 வருடங்களாகச் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிருர். இவர்மூன்று வாரகாலம் இங்கு தங்கியிருப்பார்.

......

## சீர்திருத்த திருமணம்

அராலி, ஞாயிறு

தேவாரம் போன்ற பக்திப்பாடல்களோ ஒரு சடங்குகள் சம்பிரதாயங்கள் எதுவுமின்றிப் பெரியோர்களினல் நடாத்திவைக்கப்பட்ட சீர்திருத்தத் திருமணம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை அராலியில்நடைபெற்றது.

# கலைகள் வளருது வடக்கே!

ஆண்டுதோறும் டிசம்பர் மாதத்தில் தமிழ் நாட்டில் இசைவிழாக்கள் மற்றும் கலை விழாக்கள் நடைபெறும் "சங்கீத சீசன்" என்று டிசம்பர் மாதத்துக்குத் தமிழ் நாட்டில் ஒரு பெயரும் வழங்கப்படுவதுண்டு.

யாழ்ப்பாணத்தில் இப்பொழுது நாடக சீசன் என்றோ நாட்டிய சீசன் என்றோ தனியாகப் பிரித்துச் சொல்வதைவிட கலை கலாச்சார மறுமலர்ச்சி சீசன் என்று சொல்வது பொருத்தமாக இருக்கும்.

யாழ்ப்பாணம் திறந்த வெளிஅரங்கு பலமாதங்கள் மூடப்பட்டிருந்த பின் பொங்கலன்றுதிறக்கப்பட்டு முதல் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் திரு ச. அம்பிகைபாகன் சமீபத்தில் ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டிருந்ததுபோல ஆடல் பாடல் அரங்கு ஆடல் வல்லான்சிலையுடன் அழகாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. பொங்கல் கலைவிழாவை மாநகரசபையூழியர்களின் தமிழ் மன்றமே நடாத்தியது. அந்த விழாவில் யாழ் மாநகரசபை ஊழியர்களில் ஒருவரான திரு நா. சண்முகநாதன் (யாழ்வாணன்) எழுதிய அமரத்துவம் என்ற நாடகம் நடிக்கப்பட்டதும் அந்த நாடகத்தில் மாநகரசபை ஊழியர்கள் சிலர் கலந்துகொண்டு சிறப்பாக நடித்ததும் குறிப்பிடத்தக்க விஷயம்.

பொங்கலன்றே சித்தன்கேணி சிவச்செல்வி கலாமன்றம் நடத்திய நாடகப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட ஐந்து நாடகங்கள் வீரசிங்கம் மண்டபத்தில் ஒரே இரவில் நடித்துக்காட்டப்பட்டதும் ஒரு சிறப்பம்சம்.

பொங்கலுக்கு மறுதினம் யாழ்ப்பாண நகர மண்டபத்தில் கல்வி கலை கலாச்சார காப்புக்கழகத்தினரின் கலைவிழா.

இவ்விழாவில் கே. கே. வி. செல்லையா தயாரித்த 'வாக்குறுதி' என்ற நாடகப் மேடையேற்றப்பட்டதுடன் இந்த நாடகத்தில் தயாரிப்பாளர் கே.கே வி.யும் கலைமணி எஸ் வடிவேலுவும் தோன்றிச் சபையைக் கலகலப்பாக்கியதும் தீ விபத்தில் சிக்கி மாதக்கணக்கில் ஆஸ்பத்திரிக் கட்டிலில் கிடந்த ஏ.ஆர் ஸ்ரீகிருஷ்ண மூர்த்தி தனது சரீரம் கெட்டுவிடவில்லை என்பதை கணீரென்ற மணிக்குரலால் பாடி நடித்ததும் தினசரி நாடகமிருந்தாலும் அத்தனையிலும் சளைக்காமல் நடிக்க முடியும் என்பதை எஸ. லோகநாதன் எடுத்துக்காட்டியதும் குறிப்பிடத்தக்க அம்சங்கள்.

அடுத்தநாள் திறந்தவெளி அரங்கில் கவர்னர்ஜெனரல் வருகையையொட்டி நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளில் தமிழ் நிகழ்ச்சிகளுக்கு கொடுக்கப்பட்ட இடம் தமிழ்நிறைந்த உள்ளங்களில்ஒரு கிறலை ஏற்படுத்திய போதும் திரைப்படத்தில் அவை இடம் பெருத போதும் வேலானந்தன் கீதாஞ்சலியின் மாணவிகளின் நாட்டிய நிகழ்ச்சிகள் சோடைபோகவில்லை.

இதற்குச் சில தினங்களின் பின் சித்தன்கேணி கலைநகர் நேருஜி சனசமூக நிலயத்தின் ஓர் பிரிவான நேருஜி கலா மன்றத்தினர் நாடகப்போட்டியொன்றை நடாத்தினர். இந்தப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட நாடகங்களுடன் நேருஜி கலாமன்றத்தினரே தயாரித்த 'காசேகடவுள்' என்ற நாடகமும் மேடையேற்றப்பட்டது.

மிகக் குறைந்த நேரத்தில் சிறந்த சமூக சரித்திர நாடகங்களைச் சிறந்த முறையில் தயாரிக்க முடியும் என்பதையும் கதாநாயகிவேடத்துக்கு பெண்கள் கிடைக்காவிட்டாலும்ஆண்களே ஆடிப்பாடி பெண்களைவிடச் சிறப்பாக நடிக்க முடியுமென்பதையும் இந்த நாடகங்கள் எடுத்துக்காட்டின.

நேருஜி ஜனசமூக நிலயத்தினர்கலையைமட்டும்வளர்ப்பதில் திருப்தியடையவில்லை நெசவுநிலயம்வைத்து அந்தஊர்ப் பிள்ளைகள் பலருக்கு வேலைவாய்ப்பளித்து வருவதுடன் மற்றும் கைத்தொழில்களிலும் ஈடுபட்டு கலையுடன் தொழிலையும் வளர்ப்பதில் ஈடுபட்டும் ஈடுபடவும் முயற்சிசெய்து வருகின்றனர். இவை மட்டுமல்லாமல் நூல் நிலையமும் வாசிகசாலையும் வைத்து அறிவுவளர்ச்சியிலும் அக்கறை கொண்டிருக்கின்றனர்.

சித்தன்கேணி கலைநகர்ஒரு காலத்தில் கலையும் தொழிலும் அருளும் திருவும் களிநடம் புரியும் இடமாக மிளிரக்கூடிய அறிகுறிகளைக் காணக்கூடியதாக இருக்கிறது அந்தஊர் இளைஞர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

சித்தன்கேணியில் மட்டுமல்ல அதைஅடுத்த வட்டுக்கோட்டையிலும் போட்டிபோட்டுக் கலையை வளர்ப்பதில் இளைஞர்கள் ஈடுபட்டுள்ளனர்.

நாளை பௌர்ணமிதினத்தில் யாழ் மாநகரசபையினர் நடத்தும் கலைவிழாவில் நாட்டுக்கூத்து நிகழ்ச்சியும் இடம்பெறுகிறது.

புதுமையை மட்டுமல்ல பழமையையும் யாழ்ப்பாணம் கைவிடவில்லை.

இந்நாளில் யாழ்ப்பாணத்துக்கு வரும் எவரும் 'யாழ்ப்பாணம் ஒரு கலாசாரப் பரிவனம்' என்று சொல்லத்துணியார் என்பது நிச்சயம்.

—ஊர்சுற்றி

## பதில் கல்வி மந்திரி யாழ் விஜயம்

மாவிட்டபுரம், ஞாயிறு

பதில்கல்விமந்திரி திரு. பீ. வை. துடாவை இம்மாதம் 10-ம் திகதி வடபகுதிக்கு வருகிருர். திரு. பீ. வை. துடாவை இம்மாதம் 10-ம் திகதி இங்கு வந்து அன்று மாலை கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாசாலை திறந்த வெளியரங்கை திறந்துவைத்த பின் கொழும்பு திரும்புவார்.

ஒருநாள் உத்தியோகபூர்வமானவிஜயத்தை மேற்கொள்ளும் உதவி அமைச்சர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் பின்வருமாறு:

6-15 மணி பலாலிவிமான நிலயத்தில் வரவேற்பு 6-30 பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தேநீர்விருந்து 1-40 உரும்பராய் சந்தியில் ஐ. முன்னணியால் வரவேற்பு 7 15 கோப்பாய் சந்தியில் இருந்து ஊர்வலம் ஆரம்பம் 7-30 கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலய திறந்த வெளியரங்கை திறந்துவைத்தல். பகிரங்கக்கூட்டம் இதையடுத்து காங்கேசன்துறை தொகுதி தலைமையாசிரியர், ஆசிரியர்கள் சார்பில் இராப்போசன விருந்து மறுநாள் கொழும் திரும்புவார்.

பொலிஸ் தலைமைக் காரியாலத்தில் கடமையாற்றும் கந்தையா புண்ணியமூர்த்தி நடராசா மங்கையர்க்கரசி ஆகியோரின் திருமணம் இப்படி நடந்தது.

வடபகுதி

# கள்ளக்கடத்தல் கண்காணிப்பில் ஹெலிகொப்டர் விமானங்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு வடபகுதியில் கள்ளக்கடத்தலைத் தடுக்கும் முயற்சியில் அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. கடற்படை, இராணுவப்படை கடந்த காலங்களில் கள்ளக்கடத்தலைத் தடுக்கும் வேலைகளில் ஈடு படுத்தப்பட்டிருந்தன. தற்போது ஹெலிகொப்டர் விமானமும் இதில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

தினமும் 3 இராணுவ வீரர்கள் இரவும் பகலும் ஹெலிகொப்டரில் சென்று ஆகாயத்தில் மிகப்பதிவில் பறந்து கண்காணிப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். ஹெலிகொப்டர் விமானங்கள் எந்நேரமும் கடலுக்குமேல் பறந்த வண்ணமே இருக்கின்றன.

கடற்படையினர் வள்ளங்களில் ரோந்துசெய்ய, இராணுவத்தினர் கரையில் காவல்புரிய, ஹெலிகொப்டர் இரவுபகலாக கடல் பிராந்தியத்தின்மேல்பறந்து திரிகின்றன இதன்மூலம் கள்ளக்கடத்தலுக்கு முற்றுப் புள்ளி வைக்கலாமென அரசாங்கம் கருதுகின்றது.

வடபகுதி விமான ரோந்துக்கு மேலும்சில ஹெலிகொப்டர்கள் வரவிருப்பதாகத் தெரிகிறது

(அம் நி)



## ஓய்வுபெறும் கலாசாலை அதிபர்

கடந்த ஏழு ஆண்டுகளாக கொழும்புத்துறை அரசினர் ஆசிரியகலாசாலையின் அதிபராகவிருந்து கல்வியுலகிற்கும் குறிப்பாக ஆசிரிய சமுதாயத்திற்கும் பெரும்பணியாற்றிய திரு. வி. சி. விஸ்வலிங்கம் தமது 39 வருட ஆசிரிய சேவையினின்றும் இம்மாதம் 10ம் திகதியுடன் ஒய்வு பெறுகிறார்.

தொல்புரம்நெல்லியானைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவர். ஆரம்பத்தில் அரசாங்க எழுதுவினைஞராகப் பணியாற்றியஇவர், 1932-ம் ஆண்டு சாதாரண ஆசிரியனாகப் பணியேற்றார். இவர் தமது அயராத உழைப்பாலும் கடமைமேல் இருந்த பற்றுதலாலும், ஆங்கில விசேட பயிற்சிபெற்ற ஓர் ஆசிரியனாகி அளுத்கம ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். அங்கு எட்டு ஆண்டுகள் பணிபுரிந்த காலத்திலேயே கலைப்பட்டதாரியானார். பின்னர் அட்டாளைச்சேனை அரசினர் முஸ்லிம் ஆசிரிய கலாசாலையின் உப அதிபராகப் பதவியேற்றார். அங்கு 12 வருடம் கடமையாற்றினார். இக்காலத்தில் கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கு நடாத்தப்பட்ட சேவைக்கால வழிகாட்டற் பயிற்சி வகுப்பைப் பல இடையூறுகளுக்கும் மத்தியில் நடாத்தி அதில்பெரும் வெற்றி கண்டதுடன் கல்விப் பகுதியினரின் பாராட்டையும் பெற்றார்.

1965ல் பதவி உயர்வு பெற்று, கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையின் அதிபராகக் கடமையேற்றார்.

"கல்விப்பணியே என்பணி" "கடமையே என் இறுதி மூச்சு" என்ற தாரகமந்திரத்தையே தம் மாணவருக்கு அடிக்கடி எடுத்தியம்பும் இவர், சமூகத்தொண்டனும் சமயத்தொண்டனுமாவார் அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத்தின் இணைச் செயலாளரும் அம்மன்றம் நடாத்தும் பரீட்சைகளின் பரீட்சகராகவும் கடமையாற்றுபவர். சைவ சமய வளர்ச்சிக்கென அரும்பணிபுரியும் அதிபர் அவர்கள் ஏனைய மதங்களிலும் நம்பிக்கையும் பற்றும் கொண்டவராவர். இவரது ஒய்வு ஆசிரிய சமுதாயத்திற்கு பெருத்த நட்டமாகும்.

ஒரு மாணவன்

## திருநெல்வேலி இரட்டைக் கொலைவழக்கு

யாழ்ப்பாணம், திங்கள் 'திருநெல்வேலி இரட்டைக் கொலை வழக்கு நேற்று யாழ்ப்பாணம் பதில் மாஜிஸ்திரேட் திரு. ஆர். விஸ்வநாதன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26-ம் திகதி திருநெல்வேலியைச் சேர்ந்த நாகலிங்கம் என்பவரையும், ஆறுமாதக் குழந்தையான உதயணன் என்பவரையும் கொலை செய்ததாக கணேசபிள்ளை, மகேஸ்வரி கனகாம்பிகை பரமானந்தன், மகேஸ்வரன் அல்லது குஞ்சுமணி ஆகிய ஐவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன் ஆஜரானார். வழக்காளி சார்பில் புறக்டர் ஜிம்மி இராசரத்தினம், பொலிஸாரின் உதவியுடன் ஆஜரானார்.

பதில் மாஜிஸ்திரேட் விசாரணையை இம்மாதம் 15-ம் திகதிவரை ஒத்திவைத்தார்.

## 'ஓவசியர் முறை ரத்து; அனைவருக்கும் பதவியுயர்வு'

கல்கமுவ, ஞாயிறு நாட்டின் அபிவிருத்தி திட்டங்களை குறுகிய காலத்தில் நிறைவேற்ற உத்தேசித்திருப்பதால் நாட்டின் பல இடங்களிலும் பிரதேச சிவில் எஞ்ஜினியரிங் காரியாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் ஓவசியர் சேவையை முற்றாக ரத்துச்செய்து நேரடி மேற்பார்வையாளர்களாக தற்போதைய ஓவசியர்மார்களை கூடிய வேதனத்துடன் அவர்களின் பதவிகளைமாற்றியமைக்கிறோம்'' என்று உதவி நெடுஞ்சாலை அமைச்சர் திரு சேனரத் சோமரத்ன கூறினார்.

நீர்ப்பாசன கட்டுத்தறை மேற்பார்வையாளர் சங்கக் கூட்டமொன்று அண்மையில் கல்கமுவ தொழில் நுட்பக்கல்லூரியில் நடைபெற்றபோது அதில் கலந்துரையாற்றுகையிலேயே நீர்ப்பாசன, மின் சக்தி, பெருந்தெருக்கள் உதவி அமைச்சர் சேனரத் சோமரத்ன இவ்வாறு கூறினார்

இக்கூட்டத்தில் உதவி அமைச்சர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

தற்போது சேவையில் உள்ளவர்கள் எந்த விதத்திலும் பாதிக்கப்படமாட்டார்கள். தொழிற்சங்க உரிமைகளை நாங்கள் மறுக்கமாட்டோம். சகல மாகாண அத்தியட்சகர்களுடன் உங்கள் பிரச்னைகளை தீர்த்துக்கொள்ளலாம். அவர்களுக்கு போதிய அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

சங்கக்காரியதரிசி திரு. பி. சண்முகசுந்தரம் பேசுகையில் ஓவசியர்மார்களின் சேவையில் புத்துணர்ச்சி அளிப்பதாகயிட்டு மகிழ்ச்சியடைகிறோமென்றார். (மா. நி.)

......

ஊரதீவு, ஞாயிறு புங்குடுதீவு இறுபிட்டி சனசமூக நிலையக் குழுவுக்கும் நெடுந்தீவுக் கிராமத் தெரிவுக்குழுவுக்கும் மிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் புங்குடுதீவு சனசமூக நிலையக் கோஷ்டி 3-0 கோல்களால் வெற்றியீட்டியது


பொஸ்றின்

புகையிலையும் காய்கறியும் பயிரிடும் கமக்காரரே!




இன்று பெறக்கூடிய சக்திமிகு உடன் செயலாற்றும் இக்கிருமிநாசினி காய்கறி, புகையிலை ஆகியவற்றைத் தாக்கும் பீடைகளை ஒழிக்க வல்லது.

LANKEM

இரசாயன சேவைக்கு மறுசொல் லங்கெம்.

லங்கெம் இலங்கை லிமிட்டெட்

சிலிங்கோ கட்டிடம் த. பெ. 919 கொழும்பு.

டெலிபோன்: 28333

# 'இராஜசூரியர் மெம்பரல்ல'

—மேயர்

## 'நான் மெம்பராக இருக்கிறேன்'

— இராஜசூரியர்

### மாநகரசபை விவாதங்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கடந்த கூட்ட அறிக்கையில் திரு ஏ ஜி இராஜசூரியர் சபையில் இருந்ததாக குறிப்பிடப்படவில்லையென திரு. ஏ. ரி. துரையப்பா கூறியபோது, இராஜசூரியர் மெம்பர் இல்லையென மேயர் திரு. ரி. எஸ் துரைராசா பதிலளித்தார் உடனே திரு. ஏ. ஜி. இராஜசூரியர் எழுந்து 'நான் மெம்பர்தான் அதை யாரு மறுக்கமுடியாது'' என்று கூறினர்.

யாழ்ப்பாண மாநகரசபை கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை மேயர் திரு. ரி எஸ். துரைராசா தலைமையில் ஆரம்பமானது. பெரும்பாலான உறுப்பினர்கள் கூட்ட அறிக்கையை ஆதரித்ததால் அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது

திரு. அ. நடராசா: ஐயா கூட்ட அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டதா?

மேயர்: ஆம்.

விண்ணப்பங்கள் மனுக்கள் பற்றிய நிகழ்ச்சியில் ஜனுப் எம். ஜி பசீர், மாட்டிறைச்சித் தட்டுப்பாடு பற்றிச் சபையில் பேசினர்.

மேயர்: இது வேண்டுகோளல்ல, துண்டுப்பிரசுரம்.

திரு துரையப்பா: மாட்டிறைச்சி விற்பனையாளர்கள் வேண்டுகோள் விட்டிருக்கிறார்கள். ஆதலால் அது பற்றி முடிவுசெய்யவேண்டும். மாட்டிறைச்சி வேண்டும் (கலரியிலிருந்த மாட்டிறைச்சிக்கடை உரிமையாளர்களை அடிக்கடி திரு. துரையப்பா பார்த்துக்கொண்டு பேசினர்.)

ஜனுப் பசீர்: கடைக்காரர்களின் குடும்பங்கள் கஷ்டப்படுகின்றன. அவர்கள் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும்.

பல அங்கத்தவர்கள் எழுந்து பேசிக்கொண்டிருந்தனர் கூட்டத்தில் ஒரே கூச்சலும் குழப்பமுமாக இருந்தது. இக்கூட்டத்தில் திரு. துரையப்பா கோஷ்டியினர் வெளிநடப்புச் செய்தனர்.

மேயர் தொடர்ந்து கூட்ட நிகழ்ச்சிகளை நடத்திக்கொண்டிருந்தார் நிதிக்குழு விஷயம் பற்றி ஆலோசனை நடைபெற்றது

திரு. துரையப்பா கோஷ்டியினர் சபைக்குள் மீண்டும் வந்தனர். மேயருக்கு முன்னுல் உள்ள மேடையில் ஜனுப் பசீர், ஜனுப் காதர். திரு ஏ ஜ இராஜசூரியர் ஆகியோர் அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்தனர். திரு. துரையப்பாவும் சென்று அவர்களுக்கு நடுவில் அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்தார். சுமார் 20நிமிடங்கள் சபையில் ஒரே குழப்பமாக இருந்தது.

ஜனுப் பசீர் மீண்டும் தமது ஆசனத்திற்கு வந்து மாட்டிறைச்சித் தட்டுப்பாடு பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்

உதவி மேயர்: ஒழுங்கினமாகக் கூட்டம் நடைபெறுகிறது. கட்டுப்பட்டை மீறியவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஜனுப் பசீர்: நாங்கள் கட்டுப்பாட்டை மீறவில்லை.

உதவி மேயர்: பசீர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ரி கே ராஜரத்தினம்: நடவடிக்கை எடுப்பதை ஆதரிக்கிறேம்.

திரு தம்பு கந்தையா: கூட்டம் ஒழுங்கினமாக நடைபெறுவதால் ஒத்திவைக்கும்படி பிரேரிக்கிறேன்.

திரு துரையப்பா: நான் அனுமதிக்கிறன்.

உதவி மேயர்: நாயிடசன்மைக்கும் சண்டித்தனத்திற்கும நாம் பயப்படமாட்டோம். கூட்டத்தைத் தொடர்ந்து நடத்தவேண்டும்.

பிற்பகல் 4 மணிக்கு திரு. துரையப்பா கோஷ்டியினர் வெளிநடப்புச் செய்தனர். அப்போது ஜனுப் பசீர் கலரியை நோக்கிச் ''சபையில் உள்ளவர்களைப் பாருங்கள்'' என்றுர். உடனே உதவி மேயர் எழுந்து "அவர்கள் பார்த்தால் பார்க்கட்டும்' என்றுர். சில நிமிடங்கள் உதவி மேயரும், ஜனுப் பசிரும் வாக்குவாதப்பட்டனர். அதன் பின் ஜனுப் பசீர் வெளியில் சென்றுவிட்டார்.

திரு ஏ போல்ராஜா எழுந்து பின்வரும் பிரேரணையைப் பிரேரித்தார். யாழ்ப்பாணத் திறந்தவெளி அரங்கு மகாதேசாதிபதியின் வருகைக்குப் பிற்பாடு சைவ ஆலயம் போல் காட்சியளிக்கிறது. இந்துக்களும், முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் வாழும் யாழ்ப்பாணத் திறந்தவெளியரங்கின் முகப்பு சைவ ஆலயம் போன்று அமைந்திருப்பதும், அதன் நடுவே சிவபெருமானின் நர்த்தன நிலையைப் பிரதிபலிக்கும் சிற்பம் அமைக்கப்பட்டிருப்பதும் மற்றைய சமயத்தவர்களை இழிவுபடுத்துவது போலாகுமாதலால், இந்தச் செயலை இச்சபை வன்மையாகக் கண்டிப்பதுடன் அவர்களின் மனதைப் புண்படுத்தாத வகையில் ஆவன செய்யப்படவேண்டும் என இச்சபை தீர்மானிக்கிறது.

இப்பிரேரணைபற்றி திரு போல்ராஜ் பேசியதாவது: கத்தோலிக்கர் மட்டுமல்ல; கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல; முஸ்லிம்களும் ஏற்றுக்கொள்ளாத கோயில் அமைப்பை நான் எதிர்க்கிறேன்.

திரு. அ. நடராசா: நன்றுக வாசியுங்கள்,

திரு. போல்ராஜ்: யாரும் குறுக்கிடவேண்டாம்.

மேயர்: இதனை யார் அனுவதித்தது?

உதவிமேயர்: எவரும் அனுவதிக்கவில்லை.

திரு. நடராசா: நான் அனுமதிக்கிறேன்.

மேயர்: எந்தப் பிரேரணை என்று தெரியுமா?

உதவி மேயர்: (நடராசாவிடம்) நடராஜர் சிலை பற்றிய பிரேரணை

திரு நடராசா: அப்படியா நான் அனுவதிக்கவில்லை.

திரு போல்ராஜ்: இப்படி குழப்பினுல் நான் போகிறேன்.

திரு நடராசா: நாங்கள் குழப்பவில்லை

திரு. போல்ராஜ்: ஆடல் வல்லான் சிலை, திறந்த வெளி அரங்கில் இருப்பது நியாயம். இதனை மற்றும் மயத்தவர்களும் ஏற்றுக்கொள்வர்: ஆனுல் அங்கே கோயில் அமைக்கப்பட்டுள்ளது அதனை எதிர்க்கிறேன். ஒருநாள். அவ்வீதியால் நான் வந்தபோது திறந்த வெளி அரங்குக்கு முன்னுல் ஒரு கிழவி ஆண்டவனே என்று வணங்கியதை நேரில் கண்டேன் அன்று இருந்துதான் இதனை எதிர்க்கமுடிவு செய்தேன். இதுகோயிலாக இருக்கிறது. நடராசர் சிலையை அகற்றக்கூடாது. நூல் நிலையத்தில் கலைமகள் சிலை இருக்கவேண்டும் எனப்பாடுபட்டேன். கலைமகள் அங்கு இருப்பது பொருத்தம்: அதேபோல் இங்கு நடராஜர் சிலை இருப்பது பொருத்தம். ஆனுல் அது ஆலயம் போலிருக்கிறது. கலசங்கள் காணப்படுகிறது.

திரு. நடராசா: நான் பேசலாமா?

திரு. போல்ராஜ்: இடையிலே குழப்பாதீர்கள். யாழ்ப்பாண நுழைவாசலில் கலசங்கள் உண்டு. அங்கு பிள்ளையார் கோவில் அமைக்கப்பட்டுள்ளது.

நல்லூர் கந்தசாமி கோவிலில் 5 கலசங்கள் உண்டு. கடவுளாக வணங்கப்படும் ஆறுமுகநாவலர் மண்டபத்தில் 7 கலசங்கள் உண்டு. வட்டுக்கோட்டையில் ஒரு கோயிலில் 3 கலசங்கள் உண்டு.

திரு நடராசா: அது மாதகலில்.

திரு. போல்ராஜ்: ஏன் மூன்று கலசம் என்று விசாரித்தேன். கோயிலுக்கு மட்டும்தான் கலசங்கள் உண்டு என்பதை அறிந்தேன்.

மேயர்: நல்லூரிலும் பாலைதீவூரிலும் தேர் ஓடுகிறது.

திரு. போல்ராஜ்: நான் தேர்பற்றி பேசவில்லை.

மேயர்: எல்லாச் சமயமும் ஒன்று என்பதற்காக சொன்னேன்.

திரு. நடராசா: ஐயா நான் பேசலாமா?

மேயர்: தயவுசெய்து அமைதியாக இருங்கள்.

திரு. போல்ராஜ்: கலசங்களை மட்டும் அகற்றினுல் போதும். பல சமயத்தவர் வாழும் இங்கு, கோயில் அமைக்கக்கூடாது. நீங்கள் இப்படிச்செய்தால் சிங்களவர் செய்வதுசரி என்று ஏற்றுக்கொள்ளவேண்டும், பௌத்த சமயத்தை அரசாங்க மதம் என்று ஏற்றுக்கொள்ளவேண்டும் அதில் என்ன பிழை, எங்களுக்கும் இடங்கொடுங்கள் கலசத்தை அகற்றினுல் போதும்.

மேயர்: அதுபற்றி ஆலோசிக்கிறேன்.

திரு. போல்ராஜ்: அப்படியானுல் சரி

இப்பிரேரணை வாக்குக்கு விடாமல் கைவிடப்பட்டது.

......

## மறைந்த ஆசிரியர் கங்காதரன்

நல்லாசானுக்கு ஏற்ற எடுப்பான தோற்றம். யாவரையும் இலகுவில் வசீகரிக்கும் இயல்பான உருவம். பாடசாலைக் குழந்தைகள் எங்கள் வாத்தியார் என்று உரிமையுடன் சொல்லக் கூடியளவு குழந்தையுள்ளம் படைத்த மாணவர் குரு. பரந்தமனமும், பண்பான குணமும் அடக்கமும் அறிவும் ஒருங்கே பெற்ற ஒரு உபாத்தியாயரை உரும்பராய் ஊர் கடந்த தைத் திங்கள் 2-ம் நாள் இழந்து விட்டது எழுத்தறிவித்தவன் இறைவனுகும்; இவ் இறைவனே நல்லாசிரியன் கங்காதரன். நெஞ்சில் நீண்ட இலட்சியமும் தமிழ்ப்பற்றும் சைவப்பண்பும் சீர் ஒழுக்கமும் மிகுந்தவர் திரு. கங்காதரன்.

முயற்சி உயர்ச்சி தரும் என்ற உண்மை இவரின்சிரிய வாழ்வில் உண்மையானது. ஒரு சாதாரண தோட்டப் பாடசாலைத் தமிழ் ஆசிரியராகக்கடமையாற்றிய இவர் தன் தளராத முயற்சியினுல் முன்னேறி ஒரு பயிற்றப்பட்ட முதலாந் தரத் தமிழ் ஆசிரியனுனர் கடைசியாக இவரின் சேவை கிளிநொச்சி இராமநாதபுரம் தமிழ்ப் பெருங்குடி உயர் தொழிலாளராம் பயிர்த் தொழிலாளர்க்குக் கிடைத்தது. சைவரும் தமிழும் வளர அங்கு அவர் உழைத்தார். அவரின் பேரிழப்பு ஈடு செய்ய முடியாத தொன்றுகும் அவரின் ஆன்மா சாந்தி அடைக.

— மா. வரகுகரசணி

பிரி. வெளிநாட்டு மாணவர்

## பிறரிடம் கையேந்தும் நிலையிலிருக்கிறர்கள்?

லண்டன், பெப்.7

இங்கிலாந்தில் நடைபெறும் தபால் ஊழியர் வேலை நிறுத்தம் காரணமாக இங்கிலாந்திலுள்ள வெளிநாட்டு மாணவர்கள், பணத்திற்கு பிறரை எதிர்பார்க்கும் நிலையில் இருப்பதாகத் தெரிகிறது

தபால் ஊழியரின் வேலை நிறுத்தத்தால் வெளிநாட்டு மாணவர்களுக்குச் சேர வேண்டிய காசோலைகள், மணிஓடர்கள் மற்றும் உபகாரச் சம்பளங்கள் உரியவர்களுக்குச் சேரமுடியாமல் இருப்பதாலேயே அம்மாணவர்களுக்கு இந்நிலை ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுறேது.

பல நாட்டுத் தூதரகங்களில் விரக்தியடைந்த மாணவர்கள் குழுமிய வண்ணம் இருக்கிறுர்கள். தங்கள் வீடுகளுக்கு அறிவித்து பணம் பெறுவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்துதருமாறு அவர்கள் தூதரக அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டதற்கு தாங்களும் இவ்வேலை நிறுத்தங்களால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மாணவர்களைப்போலவே தாங்களும் பாதிக்கப் பட்டிருப்பதாகத் தூதரக அதிகாரிகள் தெரிவித்தனராம்.

— —

## களவு வழக்கில் கணவனும் மனைவியும்விடுதலை

மாவிட்டபுரம், சனி

வலிமேற்கு ப. நோ கூ. ச. சமாசத்திற்கு சொந்தமான சேலைகளைக் களவாடியதாக குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் கணவனும் மனைவியும் விடுதலை செய்யப்பட்டனர்.

வலி. மேற்கு ப. நோ. கூ. சமாசத்திற்கு சொந்தமான மின்தறி நெசவு நிலையத்தில் இருந்து 1728 ரூபா பெறுமதியான 22 பட்டுச் சேலைகளைக் களவாடியதாக குற்றம்சாட்டி மல்லாகம் நீதிமன்றத்தில் பிரஸ்தாப மின்தறி நிலையதைத சேர்ந்த நெசவு ஆசிரியருக்கும் அவரது மனைவிக்கும் எதிராக இவ்வழக்கு தொடரப்பட்டிருந்தது.

மல்லாகம் நீதிபதி எஸ். ஆனந்தக் குமாரசாமி இவ் வழக்கை விசாரணை செய்து போதிய சாட்சிகள் சரியாக இல்லாத காரணத்தால் வழக்கை தள்ளுபடி செய்து எதிரிகளை விடுதலைசெய்தார்.

இவ்வழக்கில் எதிரிகள் தரப்பில் ஆர். ஜே. செல்வரத்தினம் எஸ். ஸ்ரீதரனின் உதவியுடன் ஆஜராஞர்.

— —

## தைப் பூசம்

தாவடி, சனி

கொக்குவில் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் இம்மாதம் 9-ம் திகதி தைப்பூசவிழா கொண்டாடப் படவுள்ளது.

புதிதாக அமைக்கப்பட்ட மண்டபத்தில் 'முத்துக்குமாரசுவாமி' திருவுருவம் அன்றையதினம் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது

0 0 0

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் எதிர்வரும் 9-ம் திகதி தைப்பூசவிழா சிறப்பாகக் கொண்டாடப்படவிருக்கிறது.

## வைத்தியப் பிரிவு மாணவர் மகஜர்

கோட்டை, ஞாயிறு

பல்கலைக்கழக வைத்தியப் பிரிவு மாணவர்கள் தங்களுக்கு சிங்களத்திலோ, தமிழிலோ போதனைகள் நடத்தப்படவேண்டுமென கட்டாயப்படுத்தக் கூடாது என்றும் தங்களுக்கு தொடர்ந்து ஆங்கிலத்தில் போதனைகள் நடத்தப்படவேண்டும் என்றும் கோரி பிரதமருக்கும் கல்விமந்திரிக்கும் மகஜர் ஒன்று அனுப்ப தீர்மானித்துள்ளனர்.

— —

## குட்டித் தவறணைகள்

பாண்டிருப்பு, ஞாயிறு

பாண்டிருப்பில் குட்டித் தவறணைகளின் ஆக்கிரமிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இப்பிரதேசத்தில் அடிக்கடி ஏற்படும் சண்டை சச்சரவுகளுக்கு இந்தக் குட்டித் தவறணைகளே காரணம் என்று கூறப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனக்குறைவே இந்த அவல நிலைமைக்குக் காரணம் என்று பேசிக்கொள்கிறுர்கள்.

## சுதந்திரதின விளையாட்டுப்போட்டி முடிவுகள்

பருத்தித்துறை, ஞாயிறு

சுதந்திரதின விழாவை யொட்டி வடமராட்சி தெற்கு காரியாதிகாரியினுல் நடாத்தப்பட்ட விளையாட்டுப்போட்டிகள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன 12 கிராமசேவகர் பிரிவிலிருந்தும் கலந்துகொண்ட கரபந்தாட்டப் போட்டியில் அல்வாய் மனோகரா கோஷ்டி முதலிடத்தையும் இமையாணன் கோஷ்டி இரண்டாமிடத்தையும் பெற்றன.

கயிறிழுப்பு போட்டியில் உடுப்பிட்டி கோஷ்டி முதலிடத்தையும் அன்னுலை தெற்கு இரண்டாமிடத்தையும் பெற்றன கிரீஸ் கம்பத்தில் வைக்கப்பட்ட பொற்கிளியை வல்வெட்டியைச் சேர்ந்த கே. ஞானசேகரம் பெற்றுர். அதிசிரேஷ்ட கிராமசேவகரான திரு க. சுப்பிரமணியம் வெற்றி வீரருக்கான பரிசில்களை வழங்கிஞர்.

......

## நிர்வாகிகள்

வேலணை, ஞாயிறு

இலங்கைத் தமிழரசுக் கட்சி வேலணைக் கிளையின் புதிய உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்'

தலைவர்: திரு. ஐ. பொன்னையா, உபதலைவர்: திரு. எம் ஆர். இராமலிங்கம், செயலாளர் திரு நடேனேச பிள்ளை, துணைச்செயலாளர்கள், திரு. செ. பூதத்தம்பி திரு செ முத்துத்தம்பி தனுதிகாரி திரு பி எஸ். நாதன், துணைத்தனுதிகாரி: திரு. சி இராமலிங்கம்

26 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப் பட்டனர்.

......

## மிளகாய் 2 அவுன்ஸ் கூடும்

கோட்டை, சனி

ஏப்ரல் மாதத்தில் கூப்பனுக்கு வழங்கப்படும் செத்தல் மிளகாயின் அளவு 2 அவுன்ஸாக அதிகரிக்கப்படும் உணவுப்பொருட்கள் விநியோகம் சம்பந்தமான கமிட்டி இச்சிபார்சைச் செய்துள்ளது.

# இராமநாதன் கல்லூரியில் யாழ். பல்கலைக்கழகம்

## வித்தியாதிபதி தகவல்

யாழ்ப்பாணம், திங்கள்

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் நிறுவப்படும் இத்தகவலை வடபகுதி கல்வி அதிபதி திரு. டபிள்யூ. டி. வி. மகாதந்தில தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் நிறுவும் இடம் சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை கல்வியமைச்சு அதிகாரிகளுடன் நடத்தியபின்னர் கல்வி அதிபதி இத்தகவலை வெளியிட்டார்.

இராமநாதன் கல்லூரி மாணவர்களை வேறுபாடசாலைக்கு இடம் மாற்றும்படி தெரிவிக்கும் உத்தரவை கல்வி அமைச்சிடமிருந்து தாம் எதிர்பார்ப்பதாகவும் உத்தரவு கிடைத்ததும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் திரு மகாதந்தில கூறினார்.

பரமேஸ்வராக் கல்லூரியில் இந்தப் பல்கலைக்கழகம் நிறுவப்படவேண்டுமென்று தபாலமைச்சர் திரு செல்லையா குமாரசூரியர் தலைமையிலான பல்கலைக்கழக குழு கேட்டிருந்தது. ஆயினும் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் அமையவேண்டிய இடம்பற்றி கல்வியமைச்சு தீர்க்கமாக ஆராய்ந்து வந்தது. இப்போது சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் பல்கலைக்கழகத்தை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவிருக்கும் பல்கலைக்கழகத்துடன் இலங்கையில் ஆறு பல்கலைக்கழகங்கள் இயங்கும் ஏற்கனவே உள்ள பேராதனை கொழும்பு, களனி, கொகங்டவில பல்கலைக்கழகங்களுடன் கட்டுப்பெத்தை தொழில் நுட்பக் கல்லூரி, மொறட்டுவ தொழில் நுட்பக் கல்லூரி ஆகியனவும் பல்கலைக் கழக தரத்துக்கு உயர்த்தப்படவிருப்பதாக கல்வி அமைச்ச அதிகாரி தெரிவித்தார்

இராமநாதன் கல்லூரியில் ஆரம்பிக்கப்படவிருக்கும் பல்கலைக்கழகத்திற்கு இலங்கைப்பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம் என்று பெயரிடப்படும் என்று தெரிகிறது.

---

கிராமந்தோறும்

## பட்டுப்பூச்சி வளர்க்க அரசு நடவடிக்கை

சங்கானை, ஞாயிறு

'நாட்டுப்புறங்களிலும் விளையாட்டுத்துறை அபிவிருத்திக்காக அரசாங்கம் ஊக்கம் அளித்துவருகிறது. விளையாட்டுத்துறையில் மட்டுமன்றி மற்றும் கிராம அபிவிருத்திகளிலும் அரசாங்கம் முயற்சிகள்மேற்கொண்டுள்ளது. நாட்டின் சகல பகுதிகளிலும் கிராம அபிவிருத்தி சபைகளை அரசு ஸ்தாபிக்கவுள்ளது.

வலி மேற்குக் காரியாதிகாரி பிரிவில் நடைபெற்ற சுதந்திரதின விழாவில் கலந்துகொண்டு பரிசுகளை வழங்கிய காரியாதிகாரி திரு. நடராசா பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

"அபிவிருத்திச் சபைகளில் பட்டினசபை, கிராமசபை அங்கத்தவர்களும் புதிய முறையில் அமைக்கப்படும் ப. நோ. கூ. சங்கம் விவசாயக் குழுக்கள், கிராமமுன்னேற்றச் சங்கத் தலைவர்களும். அவ்வப்பகுதிகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களும் அங்கம் வகிப்பார்கள். இச் சபைக்குக் காரியாதிகாரி தலைவராகவும், பட்டினசபை, கிராம சபைத் தலைவர்கள் உபதலைவர்களாகவும் இருப்பர் இச் சபைகள் அவ்வப்பகுதி மூலப்பொருள் வளத்தை ஆராய்ந்து கைத்தொழில். விவசாயம் முதலிய துறைகளில் படித்த இளைஞர்களுக்கு நிரந்தர வருவாய் கொடுக்கும் தொழில்களை ஏற்படுத்திக் கொடுக்கும். ஒவ்வொரு சபையும் குறைந்தது (50) ஐம்பது இளைஞர்களை நிரந்தர வருவாய் உள்ள தொழில்களில் ஈடுபடுத்தவேண்டும் என்பதே அரசாங்கத்தின் குறிக்கோள். இதில் பனம்பொருள் அபிவிருத்தி பிரதானமாக இடம்பெறும். இத்துடன் பட்டுப்பூச்சி வளர்ப்பதற்கு 'மல்பறி' செடிகளை வளர்க்கவும் முயற்சி எடுக்கப்படும்.'

கரபந்தாட்டம், சயிக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம் ஆகிய போட்டிகள் சங்கானையிலும் ஏனையவை மானிப்பாயிலும் நிகழ்ந்தன. விளையாட்டு இயக்குநர் கா. நடராசா இதற்கான ஒழுங்குகளைச் செய்தார்.

---

புதுடில்லியில்

## தமிழ்நாடு காங்கிரஸ் நிலைபற்றி பேச்சுவார்த்தை

சென்னை, பெப். 7

ஜகஜீவன் ராம் தலைமைக் காங்கிரசின் முக்கிய தலைவர்களில் ஒருவரான திரு.சி சுப்பிரமணியம் தமிழ் நாட்டில், காங்கிரஸ் கட்சியின் நிலைமைபற்றி, கட்சியின் பொதுக்காரியதரிசியுடன் புதுடில்லியில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

தமிழ் நாட்டில் லோக சபைக்கும், சட்டசபைக்கும் வேட்புமனுக்கள் தாக்கல் செய்த வேட்பாளர்கள் விலகிக்கொள்ளும் நோக்கமில்லை என திரு. சுப்பிரமணியம் பொதுக்காரியதரிசியிடம் வலியுறுத்தியதாகத் தெரிகிறது. தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக்கழகத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி. தமிழ்நாடு சட்டசபைக்கு ஜகஜீவன் ராம் தலைமைக் காங்கிரஸ் போட்டியிட முடியாது. ஆனால் இந்த முடிவு கட்சியின் உறுப்பினர்களிடையே அதிருப்தி ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

பிரதமர் இந்திரா காந்தி புதுடில்லி திரும்பியதும் தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியின் செயல்முறைபற்றிய தீர்க்கமான முடிவு தெரியுமென அரசியல் வட்டாரங்களில் கருத்து நிலவுகிறது.

---

## ஆசிரியர்களின் இடமாற்றம் ஒத்திவைப்பு

கோட்டை, ஞாயிறு

நாடுபூராவும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்றங்களை கல்வி அமைச்சு தற்காலிகமாக நிறுத்திவைத்துள்ளது.

கல்வி அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி டாக்டர் பிரேமதாச உடகமவின் உத்தரவின்பேரில் இடமாற்றச் சபைத்தலைவர் திரு. சந்திர குணசேகரா இவ்வித அறிவித்தல் ஒன்றை நேற்று விடுத்தார்.

கல்வி அமைச்சின் நிரந்தரக்காரியதரிசியின் உத்தரவின்படி பெப்ரவரிமாதம் 15-ம் திகதிக்குப் பின்னர் நடைபெறவிருந்த இடமாற்றங்கள் தற்காலிகமாக ரத்துச்செய்யப்பட்டுள்ளது. அதற்கு முன்னைய இடமாற்றங்கள் அறிவித்தலின் பிரகாரம் நடைபெறும் என்று இடமாற்றச்சபைத் தலைவர் அறிவித்தார்.

---

## கூப்பன் சாட்சியம் திகதி நீடிப்பு

கோட்டை, ஞாயிறு

அரிசிக் கூப்பன் புத்தகங்கள் சம்பந்தமானபுகார்களை இதுசம்பந்தமாக ஆராய்வதற்காக அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட குழுவிடம் இம் மாதம் 28ம் திகதிவரை தெரிவிக்கலாம். முன்னர் ஜனவரி 31ம் திகதி வரை மட்டுமே சாட்சியங்களைப் பதிவு செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

கூப்பன் புத்தகங்கள் சம்பந்தமாக மக்களின் அபிப்பிராயத்தை தெரிந்துகொள்வதற்காக உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு ரி. பி. இலங்கரத்ன இக் கமிட்டியை நியமித்தார்.

---

### யாருடைய சூட்கேஸ்?

அராலி கல்லுண்டாய் வெளிப்பாலத்துக்குச்சமீபத்தில் சூட்கேஸ் ஒன்றை கந்தர்மடத்தைச் சேர்ந்த அ. செல்வராசா என்பவர் கண்டெடுத்து "ஈழநாடு" காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் காரியாலயநேரத்தில்வந்து தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

## மக்கள் குழு இலாகா இயங்க ஆரம்பம்

கோட்டை, ஞாயிறு

மக்கள் குழு இலாகாவின் தலைவராக திருகோணமலை அரசாங்க அதிபர் திரு லயனல் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார் இம் மாத முடிவுக்குள் அமுலுக்கு வரவிருக்கும் மக்கள்குழு பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சின் கீழ் இயங்கும்.

மக்கள்குழு இலாகா தனது முதலாவது நடவடிக்கையாக நாடுபூராவும் மக்கள் குழுக்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளைமேற்கொள்ளும் தொகுதிஎம். பிக்களின் ஆலோசனையின் பேரில் மக்கள் குழு அங்கத்தவர்கள் நியமனம் பெறுவர் என்றும் அரசாங்க இலாகாக்களுடன் மக்கள் குழுவுக்கு நெருங்கிய தொடர்பிருக்கும் என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

---

### ஏன் கலந்து...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யூ. என். பி ஆட்சிக்காலத்தில் ஏற்படுத்தப்படாத தமிழர் ஒற்றுமை இப்போது மட்டும் ஏன் என்று எனக்குத் தெரியவில்லை,

தமிழ் மக்களை மக்கள் அரசு புறக்கணித்து வருகின்றது என்ற கூற்றில் உண்மையில்லை மக்கள் அரசு தமிழ் மக்களை அணைத்தே ஆட்சியை நடாத்தி வருகின்றது. இதை நாம் அனுபவத்தில் உணர்கிறோம் தமிழர் உரிமைகளைப் பாதுகாத்து வருவது மக்கள் அரசு அவர்கள் அபிலாசைகளைத் திட்டமிட்டுப் பூர்த்தி செய்துவருகிறது மக்களரசு உதாரணமாக எத்தனையோ ஆண்டுகாலமாக எதிர்பார்க்கப்பட்ட சர்வகலாசாலையை அமைத்துத்தர நடவடிக்கை எடுத்தது மக்களரசு இப்போது ஏன் ஒற்றுமைக்கூச்சல்.

தமிழர் ஒற்றுமை என்ற போர்வையில் முதலாளித்துவ வர்க்கம் ஒன்று கூடுகின்றது. தமிழராயினுஞ்சரி சிங்களவராயினுஞ்சரி ஏழைகள் தொழிலாளிகள் பாட்டாளிப் பாமரர் என்ற வர்க்கரீதியில்ஒன்று கூடவே என்றும் யான் விரும்புகின்றேன்,

---

### இன்று

யாழ்ப்பாணம், திங்கள்

பாஷையூர் மக்கள் முன்னேற்றச்சங்கச் சனசமூக நிலைய ஆண்டுவிழா இன்று தொடங்கி 9ந் திகதி வரை நடைபெறும்.

இவ்விழாவில் தபாலமைச்சர் திரு. குமாரசூரியர் கலந்துகொள்வாரென்றும் தெரிகிறது. விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

---


### கஷியர் கிளார்க் தேவை

ஆங்கிலத்திலும், தமிழிலும் நன்கு தேர்ச்சிபெற்ற கணக்கு வைக்கத் தெரிந்த பிணைப்பணம் கட்டக்கூடியவர் தேவை. அனுபவம், தராதரம், திறமைக்கேற்ப சம்பளம் தரப்படும். 13-2-71ந் திகதி அல்லது முன்னர் விண்ணப்பிக்கவும்.

ஸ்ரீ ஜோதி டிஸ்பென்ஸரி அன் சேர்ஜரி

தெல்லிப்பளை 2673


---

### மரண அறிவித்தல்

**கா. வயிரவப்பிள்ளை**

இளைப்பாறிய புகையிரதநிலைய அதிபர் கார்த்திகேசு வயிரவப்பிள்ளை காலமானார். இவர் கரவெட்டி நீர்ப்பாசனப் பகுதியைச் சேர்ந்த திரு. மகேசன், செல்வி மகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் கொல்லங்கலட்டி கார்த்திகேசு காசிப்பிள்ளையின் சகோதரருமாவார் அன்னாரது பூதவுடல் கருகம்பானையிலுள்ள அவரது இல்லத்திலிருந்து இன்று பிற்பகல் இரண்டு மணியளவில் தகனக்கிரியைக்காக கீரிமலை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்,

2188

---

இப் பத்திரிகை 'ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.